யெம்மைக்கவலைசெய்யச்சொல்லியோவல்லியெடுதியமே. உரு

இயங்குந்திரிபுரமெய்தவேகம்பரெழிற்கயிலைத்
தயங்குமலர்பொழில்சாரலையடலாடருவித்தடங்கா
முயங்குமணியறைகாண மொழியீரொழியாதுநெஞ்ச
மயங்கும்பரிசுபொன்னார் சென்ற சூழல்வகுத்தெமக்கே. உசா

வகுப்பாரிவர்போன்மணத்துக்குநாண் மணங்கனைறுடின்ப
மிகுப்பார்களாயின்றென்று மிருவரைவிள்ளகசளாய்
[illegible]குப்பான்மலர்கொண்டு நின்றார்கிடக்கநிலவுகமபர்
தொகுப்பான்மணிசிந்தருவிக் கயிலையிசசூழ்புனத்தே. உஎ

புனக்குழையாதென்றினைகொய்யதனும்போகலுற்ற
கனக்குழையாளறப்பிரியநமகருறுங்கையறவால்
மனக்குழையாவருங்கண்கனிபண்பலபாடுந்தொண்டர்
இனக்குழையாத்தொழுமேகம்பரிக்கயிலாயத்துளளே. உஅ

உள்ளம்பெரியரல்லாச்சிறுமானிடருற்றசெல்வங்
கள்ளம்பெரியசிறுமனத்தார்க்கன்றிக்கங்கையெனும்
வெள்ளம்பெரியசடைத்திருவேகம்பர்விண்ணணரணங்
தள்ளம்பெரிகொண்டமைத்தாடியவர்சார்வதன்றே. உகூ

அன்றும்பகையடர்க்கும்பரிமாவுமதவருவிக்
குன்றும்பதாதியுந்தேருங்குலவிக்குடைக்கீழ்

நின்றும்பொலியினுக்கம்பர்நன்னீறுநுதற்கிலரேல்
என்றுமரசுமுரசும்பொழியா திருக்கினுமே ௩௰

நிலத்திமையோரில்லையாய்ப் பிறந்துமறையொடங்க
வலத்திமைப்போதும்பிரியா ரெரிவளர்த்தாலும்வெற்பன்
குலத்துமையோர்பங்கர்கச்சியுளே கம்பங்கூடித்தொழு
நலத்தமையாதவர் வேட்டுவ ரம்மினப்படையே. ௩௧

படையாளுயிரொன்றுஇன்று பசுக்களைப்போலச்செல்லு
நடையாலறிவின்றிநாணசிறிதின்றிநருங்குலத்தி
கடையாயபிறர்க்கிறைஞ்சிகச்சியுளேகம்பத்தெங்களையா
ரூடையானகழற்கன்ப ரல்லவையாவாககுழுக்கடரே. ௩௨

உத்துங்கயானையுரியாரவிரலாலரக்கன்சென்னி
உத்துங்கையானைவிருபதுமஞ்சோரத்தரவைத்திலனை
யொத்துங்கையாவலவனபாடக சவிலைபுனைவோரற்கைவா
னொத்துங்கையாமென்றுகந்தளித்தார்கச்சியேகம்பரே. ௩௩

அம்பரமகாலனணிர்திலத்திங்களருக்கனனு
வம்பரங்கொளவைத்தாரவேறுகந்தூரியவன்மனனாருரை
மெம்பரனகச்சியுளேகம்பனத்திடையாடைபோ
னம்பரனறனனடியாரறிவாரசட்கவன்றுனேயே ௩௪

துணைத்தாமரையடியும்பவளத்திரணன்குரங்கும்ப
பனைத்தோளகலமுங்கண்டமுநீறுபடதுமின்ன
பனைத்தாழ்சடையுநிருமுகமும்பெண்மணோர்பக்கத்
தனைத்தாரெழிற்கம்ப ரெங்கள்பிரானுக்கழகியவே ௩௫

அழகறிவிற்பெரிகாயமேவசம்பாரக்காதொற்றமை
பழகறிவிற்பெரியோர்கமைபாறநலர்பற்றுமன்பின்
குழகறிவேற்பினுமொன்றறியாரறியாமைதெய்வக்
கிழகெறியப்பட்டுலந்தாருலகிற்கிடந்தனரே. ௩௬

கிடக்குமொருபால்விரைக்கின்றபாம்பொருபான்மதியம்
தொடக்குண்டிலங்குமலங்குதிரைக்கங்கைசூழுங்கொன்றை
வடக்குணடிகட்டச்சலமாலைவாளான்மலைந்தவெம்போர்
கடக்குமவிடைத்திருவேகம்பர் கற்றைச்சடைமுடியே. ௩௭

கற்றைப்பவளச்சடைவலம்பூக்கமழ்கொன்றையந்தார்
முற்றுத்திலர்மதியினகொழுந்தேகம்பமெயகுழலா
மற்றைத்திசையின்மணிப்பொற்கொழுந்தத்தரங்கழுநீர்
தெற்றிப்பொலிகிறைசூட்டழகாகித்திகழ்தருமே. ௩௮

தருமருட்டன்மைவலப்பாற்கமலக்கணெற்றியின்மேற்
றிருமலர்கண்பிளவின்றிகழுந்தழல்செல்வக்கம்பர்
கருமலர்கணணிடப்பாலதுநீலங்கனிமதத்து
வருநுதற்பொட்டணிக்குக்குயாதோங்குமலர்க்குழலே. ௩௯

மணர்ந்தபடத்துச்சியைத்தினுஞ்செஞ்சுடர்மாமணிவிட்
டணர்ந்தமணிக்குண்டலமுமலக்காதினிலாடிவரும
கலர்த்திருநீள்வயிரமவெயிற்பாயுங்குழைகள
கலந்தசெம்பொன்மகரக்குழையேகம்பர்காதிடமே ௬௰

காதலைக்கும்பலைத்தோள்பவளக்குன்றமாக்குயர்ந்து
போதலைக்குமயனிப்பொன்மலைநீறணிபொலிபக்கல
காதலைக்குக்குழலசோபனைதம்மைக்காணலாஞ்சாந்தணிந்து
ஏகலைக்குழலமாயிடமேகம்பர்சுந்தரமே ௬௧

சரம்போற்பழியுமுலைகட்டி பெய்த்துக்சரந்தளரா
வரம்பொற்புடையதிருவயிறுமவலயமபாழுமமையு
புரமபொற்பழிதக்கபாசருகதாகதிருப்பூணையுலையு
நிரம்பபொருந்துதளிர்னைருசியுமிருடைதமே. ௬௨

உடைப்புலிபாடையினமேலுரக்கச்சுவீக்கிமுஞ்சி
வடத்தொருகோவணநீகானறுமறைவலமறையல்குற
றொடக்குறுசாந்தின்தொடுத்தகவாசிலைதாறுண்டுகில
அடற்பொலியேறுடையேகம்பமேயமடிகளுக்கே ௬௩

அடிவலப்பாலதுசெங்காமரையொத்ததிகழுஞ்சூழந்
திடிதாரக்கூற்றினொருதிறமைதகிளந்தவரி
வடியிடப்பாலதுபஞ்சுறவஞ்சுருசிலம்பணிந்த
வடிவுடைத்தாகச்சியேகம்பமேயவர்தருக்கே. ௬௪

தருக்கவற்றாளமிக்கழுப்புரமெய்கயன்றன்றலையை
நெருக்கவற்றோடமழுவாளிசைந்துநெய்களெனறும
பருக்கவற்றேகம்பர்தங்காதம்பாம்புகளின
திருக்கயிற்றாவிட்டருளுங் கடகத்திருக்கரமே. ௬௫

கரக்கத்தமாகக்கோதை கடுத்தனைடமீரிளப்ப
வரத்தக்கபாகநெரிதசிட்டவனிதலநெரியத்
தரத்தக்கிசைகளகப்புறமபோர்ப்பசசடைவிரித்து
வரத்தைத்தருகம்பராடுவரெவ்வியுமாநடமே ௬௬

நடம்பிரானுகந்துய்யக்கொண்டானென்றுநம்மறையோ
ருடன்வந்துமவாயிரவரிறைஞ்சநிறைந்தவனபும
கடனின்றிமற்றறியாக்கில்லையம்பலங்காளாக்கியா
யிடமெம்பிரானேகம்பமேயாறகினியனவே. ௬௭

இனியவரின்னாவரையொப்பாற்பிறரென்னவென்னாத்
தனியவனேகம்பனுடைன முருவிறம்பணித்த
முனியவரொனறுமுகவதமுககணணவாதணடிபடியைபுக்
கினியவராயமழுவாட்படையாகம்பரே. ௬௮

பாவித்தனை வினையக்கச்சியேகம்பர் பண்ணுமையல்
வாவித்தனையுள்ள செங்கழிந்தேனை முனைவா மகளூர்
புரவித்தனையடக்கக்கொடி தாய்விடியா விரவி
லரவித்தனையுங்கொண்டார் மடவார் முனைவிலாட்டிடவே. ௪௯

இடவந்தசுருக்கொப்பாயுமெந்தசென்னிக்குதலைகண்
டிடவந்தவாமடவார் திரிவொமனமெய்கமபத்திர
படமந்தவாயதுங்காகமிலைகருமதனுக்குரும்
படவருசவலொங்கயவோபழிவந்திகமாய்க்கினோ. ௫௰

பாய்குடைக்கோட்புலியின் தன்கொணமர் தும்பாரிடங்க
டாங்குடைகொள்ளப்பலிகொள்ளவுமிர கடமங்கமலம
பூங்குடைகொள்ளப்புனர்கச்சியேகம்பர் கோயில்கொண்டு
ரீயங்கொள்ளக்கலைகொள்ளவுந்திரிடைக்குமின்றே ௫௧

இடைக்குமினமேறுக்குமிலை முலையாய் முதியார் கடுஞ்சொற்
கடைக்கணமுற்றுங்கச்சியேகம்பரைய கொளக்கடவும்
விடைக்குமுனமேறுந்திறவியிடையெயமுலா
விடைக்குமுனமேறும்பஞ்சயங்கிதுவோர்க்கிறந்துவமே. ௫௨

கிறிபலபேசிச்சதிராடைந்துவிடக்குபடக
குறிபலபாடிகருளிக்கச்சியேகம்பரையுமகொள்ள
நெறிபலவார்குழலார்மெலிவுற்றமெங்கெருவிற
செறிபலவெள்வளைபோயினதாயாகவேண்டுமே. ௫௩

தேடுற்றிலகள்ளமேர்ககும் வெரிந்திலசொற்கணமூடி
கூடிற்றிலகுடைகொய்கைக் கொமுத்திலகூறுமிலவ
மாமுற்றிலமணிவினமடவலகுலுமற்றிலவாபா
ஞமுற்றிலவெழிலேகமப ரூரகருபாரீரங்கிடமே. ௫௪

நல்கும்புகழ்கடவுரினை யனைபவனுய்யநண்ணிக்
கொல்கினறகூற்றக்குமைத்த வெங்கூற்றங்குளிர்திரைகண
மல்குந்திருமறைக்காட்டமர் தெனறுயலைபகடான
புல்குமபொழிற்கச்சி யேகம்பமேவியபொனமலையே. ௫௫

மலையத்தகத்தியனர்ச்சிக்க மன்னிவடகயிலை
நிலையத்தமராதெரறவிருந்தா மொருமேருவென்னுஞ்
சிலையத்தகன்னைப்பொன்மதிற்றிருவேகம்பத்தானிகழ்
மலையத்தடம்பொனனிசூழ திருவையாற்றருமணியே. ௫௬

மணியாருருவித்தடவியயங்கிடக் கொல்லிகல்வின்
றிணியாருருவிடுமாத்த கிரமலையைவணங்க
வணியாருருவிகயர்விரி யொட்டமினசாரலிந்தம
பணியாருருவினைதீர்க்கு மேகம்பர்பருப்பதமே. ௫௭

பருப்பதங்காதவழ்மந்தர மிந்திரநீலம்வெள்ளை
மருப்பதங்கார்கருங்குன்றியங் கும்பரங்குன்றவில்லார்
நெருப்பதங்காவுதிநாறு மயோந்திரமென்றிவற்றி
விருப்பதங்காவுகந்தான் கச்சியேகம்பத்தெம்மிறையே. ௫௮

இறைத்தார்புரமெய்தவில்லிமை நல்லிமவான்மகட்கு
மறைத்தார்கருங்குன்றம்வெண்குன்றஞ்செங்குன்றமன்னற்குன்ற
நிறைத்தார்நெடுங்குன்ற நீள்கழுக்குன்றமென்றீவினைகள
குறைத்தார்முதுகுன்ற மேகம்பர்குன்றென்றுகூறுமினே. ௫௯

கூறுமின்றொண்டர் குற்றாலநெய்த்தானந் துருத்தியம்பேர்
தேறுமின்வேள்விக் குடிதிருத்தோணிபுரம்பழன
மாறுமின்போற்சடை வைத்தவனாரூரிடைமருதென்
றேறுமினீரெம்பிரான் கச்சியேகம்பமுன்னினைந்தே. ௬௰

நினைவார்க்கருளும்பிரான் றிருச்சோற்றுத்துறைநியமம்
புனைவார்சடையோன்புகலூர் புறம்பியம்பூவணநீர்
நனைவார்பொழிற்றிருவெண் காடுபாச்சிலதிகையென்று
நினைவார்தருநெஞ்சினீர்கச்சியேகம்பநண்ணுமினே. ௬௧

நண்ணிப்பரவுந்திருவாவடு துறைநல்லநல்லூர்
மண்ணிற்பொலிகடம்பூர் கடம்பந்துறைமனனுபுன்கூ
ரெண்ணற்கரியபராய்த்துறை நல்லெதிர்கொள்பாடிக்
கண்ணிப்பிறைச்சடையோன் கச்சியேகம்பங்காணமின்சென்றே. ௬௨

சென்றேறிவிண்ணுறுமண்ணுமலை திகழ்வல்லமென்பூ
வின்றேற்றல்பாய்திருமாற் பேறுபாசூரெழில்வழுந்தூர்
வன்றேரவன்றிருவிற் பெரும்பேறுமதிலொற்றியூர்
நின்றோர்தருகச்சி யேகம்பமேயாநிலாவியவே. ௬௩

நிலாவுபுகழ்திருவொத்தூர் திருவாமாத்தூர்நிரைநீர்
சுலாவுசடையோன்புலிவலம் வில்வலம்கொச்சைதொண்டர்
குலாவுந்திருப்பனங்காடு நன்மாற்றல்கூற்றம்வந்தா
லலாவென்றடியார்க் கருள்புரியேகம்பராலயமே. ௬௪

ஆலையங்கார்கருகாவை கச்சூர்திருக்காரிகரை
வேலையங்கேதுதிருவான்மியூர் திருவூரன்மிக்க
சோலையங்கார்திருப்பேரந்தை முக்கோணந்தொடர்கடுக்கை
மாலையன்வாழ்திருவாலங்கா டேகம்பம்வாழ்த்துமினே. ௬௫

வாழப்பெரிதெமக்கின்னருள்செய்யு மலர்க்கழலோர்
வீழச்சடைத்திருவேகம்பர் தம்மைத்தொழாதவர்போய்
காழப்பாற்சுரமாற்றுதளிரடிப் பூங்குழலெம்
மேழைக்கிடையிருக்கும் குயபாரமியக்குறினே. ௬௬

உறுகின்றவெவ்வழலக்கடமிக்கொடிக்குன்பின்வரப்
பெறுகின்றவண்மையினாலையபேரருளேகம்பனார்
துறுகின்றமென்மலர்த்தண்பொழிற்கச்சியைச்சூழ்ந்திளையோர்
குறுகின்றபூங்குவளைக்குறுந்தணபணையென்றுகொளே. ௬௭

கொள்ளுங்கடுங்கதிர்க்கள்ளித்தீச்சிலம்வேயுலர்ந்து
விள்ளும்வெடிபடும்பாலைபெண்பாலன்றிடலையினனே
தெள்ளும்புனற்கச்சியுட்டிருவேகம்பர்சேவடியை
யுள்ளுமதுமறந்தாரெனப்போவதுரைப்பரிதே. ௬௮

பரிப்பருந்திண்மைப்படையதுகானரைநிற்சிறகு
விரிப்பருந்துக்கிரையாம்வெய்யவனஞ்சலஞ்சடைமேற்
றரிப்பருதிங்கங்கையார்திருவேகம்பமன்னபொன்னே
வரிப்பருங்கிணைசிலையேயுமாயின்மறைகுவனே. ௬௯

வன்வரித்திண்புலியின்னதளேகம்பமன்னருளே
பொன்வருபொன்னணங்கேயானைக்கிங்கெனெழிற்கழங்குந்
தன்வரிப்பந்துங்கொடுத்தேனைப்புல்லியுமிற்பிரிந்தே
யினவரிக்கல்லதர்செல்வதெங்கேயொக்குமேழைநெஞ்சே. ௭௰

நெஞ்சார்தரவின்பஞ்செய்கழலேகம்பர்கச்சியன்னாள்
பஞ்சாரடிவைத்தபாங்கிவையாங்கவள்பெற்றெடுத்த
வெஞ்சார்வொழியத்தன்பினசெல்றனசெல்வெடுவெடென்ற
வஞ்சாவடுதிறற்காளைதன்போகிவையந்தத்திலே. ௭௧

இலவவெங்கானுனையல்லாற்றொழுந்தரனேகம்பனார்
நிலவுஞ்சுடரொளிவெய்யவனேகனமலாமிதித்துச்
செலவும்பருக்கைகுளிரத்தளிரடிசெல்சுரத்துன்
னுலகுங்கதிர்தணிவித்தருள்செய்யுந்தனுறுதுணைக்கே. ௭௨

துணையொத்தகோவையும்போவெழிற்பேதையுந்தோன்றலுமுன்
னிணையொத்தகொங்கையோடேயொத்தகாதலோடேகினரே
யணையத்தரேறொத்தகாளையைக்கண்டனமற்றவரேற்
பிணையொத்தநோக்குடைப்பெண்ணிவடன்னொடும்பேசுமினே. ௭௩

மின்னலிக்கும்வணக்கத்திடையாளையுமீளியையு
நென்னலிப்பாக்கைவந்தெய்திடுவிரெம்மனையிற்கண்டீர்
பின்னரிப்போக்கருங்குன்றுகடந்தவரின்றேகம்பர்
மன்னரிதேர்ந்துதொழுங்கச்சிநாட்டிடைவைகுவரே. ௭௪

உவரச்சொல்வேடுடைக்காடுகந்தயவேகம்பனார்
அவரக்கன்போனவிமானத்தையாயிரமுண்மைசுற்றுந்
துவரச்சிகரச்சிவாலயஞ்சூலந்துலங்குவிண்மேற்
கவரக்கொடிதிளைக்குங்கச்சிகாணினுங்கார்மயிலே. ௭௫

கார்மிக்ககண்டத்தெழிற்றிருவேகம்பர்கச்சியின்வா
யோர்மிக்கசேற்றெழினென்னடுவோரொலிபொன்மலைபோற்
போர்மிக்கசெந்நெற்குவிப்போரொலிகருப்பாலையொலி
நீர்மிக்கமாக்கடலின்றொலியேயொக்குநேரிழையே. ௭௬

நேர்த்தமையானைமயிறற்கொடுவேடர்நெடுஞ்சுரத்தை
பார்த்தமையாலிமைதீர்த்தகண்பொன்னேபகட்டுரிவைப்
போர்த்தமையாலுமைநோக்கருங்கம்பர்கச்சிப்பொழிலுட்
சேர்த்தமையாலிமைப்போதணிசிதருஞ்சிறந்தனவே. ௭௭

சிறைவண்டுபாடுங்கமலக்கிடங்கிவைசெம்பழுக்கா
நிறைகொண்டபாளைக்கமுகினபொழிலிவைநீங்கனிப்பின்
பொறைகொண்டவாழைப்பொதும்புவைபுன்சடையேகம்பனூர்
நறைகொண்டபூங்கச்சிநாடெங்குமிவ்வண்ணநன்னுதலே. ௭௮

கன்னுதலார்கருங்கண்ணுஞ்செவ்வாயுமிவ்வாறெனப்போய்
மன்னிதழார்திருநீலமுமாம்பலும்பூப்பவள்ளை
யென்னவெலாமொப்புகாதென்றுவீற்றிருமேகம்பனூர்
பொன்னுதலார்விழியார்கச்சிநாட்டுப்பொய்கையுளே. ௭௯

உளவார்குளிரநெருங்கிக்கருங்கிடங்கிட்டநன்னீர்
வளவாளைகளொடுசெங்கயன்மேய்கின்றவெங்களையாட்
கொளவார்பிறவிகொடாதவேகம்பர்குளிர்குவளை
களவார்தருகச்சிநாட்டெழிலேரிகளப்பரப்பே. ௮௰

பரப்பார்விசும்பிற்படிந்தகருமுகிலன்னநன்னீர்
தரப்பாசிகண்மிகுபண்பொடுசெம்படர்தண்பணைவாய்ச்
சுரப்பாரெருமைமலர்தின்னத்துன்னுகராவொருத்தல்
பொரப்பார்பொலிநுதலாய்ச்செல்வக்கம்பர்தம்பூங்கச்சியே ௮௧

கச்சார்முலைமலைமங்கைகணவனைவெண்ணூன்சுழலும்
வைச்சார்மகிழ்திருவேகம்பர்தேவிமகிழ்வினனோர்
விச்சாதரர்தொழுகின்றவிமானமுந்தன்மமரு
வச்சாலையும்பரப்பாங்கணிமாடங்களோங்கினவே ௮௨

ஓங்கினவூரகமுள்ளகமும்பருகிடமாம்
பாங்கினினின்றதரியுறைபாடகந்தெவ்விரிய
வாங்கினவாட்கண்ணிமற்றலர்மைத்துனிவான்கவிக
டாங்கினநாட்டிருக்காளத்துதன்மனையாயிழையே. ௮௩

இழையாரரவணியேகம்பனெற்றிவிழியினவந்த
ழையாவருணம்பிராட்டியதின்னைபிறங்கலுன்னு

நுழையாவருதிரிசூலத்தனேக்கரும்பொன்கடுகைத்
தழையார்பொலிலுதுபொன்னேநமக்குத்தளர்வில்லையே. அ௪

தளராமிகுவெள்ளங்கண்டுமையோடித்தமைத்தழுவக்
கிளையார்வளைக்கைவடுப்படுமீங்கோர்கிறிபடுத்தார்
வளமாபொழிற்றிருவேகம்பமற்றதுவந்திறைஞ்சி
யுளராவதுபடைத்தோ மடவாயிவ்வுலகத்துளளே. அ௫

உலவியமின்வடம்வீசி யுருமதிர்வுண்முழங்கி
வலவியமாமகம்பாய்முகிலி யானைகள்வானில்வந்தாற்
கலவியவார்குழல்பின்னரென் பாரிவணினைந்து
நிலவியவேகம்பர்கோயிற் கொடியன்னநீர்மையனே. அ௬

நீரென்னிலும்மழுங்கண்முகில காணெஞ்சமஞ்சலையென்
றூரென்னிலுந்தமரா யுரைப்பாரமராபதிக்கு
நேரென்னிலுந்தகுங்கச்சியுளே கம்பர்நீண்மதில்வாய்ச்
சேரென்னிலுந்தங்கும்வாட்கண்ணிதானன்பர்தேர்வரவே. அ௭

வரங்கொணடிமையோர்நலங்கொள்ளுமேகம்பர்கச்சியென்னுய்
பரங்கொங்கைதூவன்மீனீர்முத்தமைபர்தங்கேரினமுனனே [தின்
தரங்கொண்டுநகொண்டுகொன்றைபொன்னுகத்தண்காந்தள்கொத்
கரங்கொணடுபொற்சுண்ணமேந்தவுமபோந்தனகார்முகிலே. அஅ

கார்முகமாரவணைகைகொணடகம்பர்கழற்றொழுது
போர்முகமாப்பகைவெல்லசென்றார்நிலையாபுணரி
நீர்முகமாகவிருண்டுசுரந்துபேரிழைசா
மாமுகமாகவினைக்கடனீந்துதும்வெய்துயிர்ப்பே. அ௯

உயிராயினவன்பர்தேர்வரக்கேட்டுமுன்வாட்டமுற்ற
பயிரார்புயல்பெற்றதென்னநம்பலவளைபான்மைகளாங்
தயிரார்பானெய்யொடுமாடியவேகம்பர்தம்மருள்போற்
கயிராவளையழுந்தக்கச்சிறுத்தனகார்மயிலே ௯௰

கார்விடைவண்ணத்தனன்றெழுதழுவினியின்றுதனிப்
போர்விடைப்பெற்றெதிர்மாணடாரெனவண்டாபோதவிட்டார்
தார்விடையேகம்பர்கச்சிப்புறவிடைதம்பொனன்பூண்
மார்விடைவைகல்பெறுவார்தழுவமழவிடையே ௯௧

விடைபாய்கொடுமையெண்ணுதுமெலாங்கன்னிவேர்கருங்கட்
கடைபாய்மனத்தினங்காளையாபுல்கொலிகம்பர்கச்சி
மடைபாய்வயலிளமுல்லையின்மாங்கன்றூடானகன்றினங்
டையாய்தொறும்பதிமன்றிற்கடல்போற்கலங்கெழுமே. ௯௨

கழுமலர்த்தண்பொழிலேகம்பர்கச்சியிருங்கடல்வாய்க்
கொழுமணப்புன்னைக்குரவான்மணற்குன்றிற்பாதர்கொம்பே
செழுமலர்ச்சேலல்லவாளல்லவேல்லநீலமல்ல
முழுமலர்க்கூரம்பினோரிரண்டாலுமுகத்தெனவே. ௯௩

முகம்பாகம்பண்டமும்பாகமென்றோதியமுதுரையை
யுகம்பார்த்திரேலென்னலமுயரேகமபர்கச்சிமுன்னி
ரகம்பாகவார்வினைவில்லையென்னின்பரவளச்செவ்வாய்
நகம்பாற்பொழிற்பெற்றநாமுற்றவர்கொள்கநன்மயலே. ௯௪

மயக்கத்தநல்லிருட்கொல்லுஞ்சுறவொடறிமகர
மியக்கத்திடிசுழியோதங்கழிகளரகழித்தார்
துயக்கததவர்சருளாக்கம்பர்கசசிகடலர்பொன்னூன்
முயக்கத்தகல்வுபொருள்கொணகநீர்வருமூர்க்கஞ்சமே. ௯௫

மேயிரைவைக்கக்குருகுணராமதுவுண்டுபுன்னை
மீயிரைவண்டோதமாபுககடியவிரிகடல்வாய்ப்
பாயிரைநாகங்கொண்டோன்றொழுங்கமபர்கச்சிப்பவவநீர்
தூயிரைகானன்மற்றாரறிவார்தந்துறைவர்பொய்யே. ௯௬

பொய்வருநெஞ்சினர்வஞ்சனையாரையுமபோகவிடா
மெய்வருமபேரருளேகம்பர்கச்சிவிரையினவாய்க்
கைவரும்புள்ளொடுசங்கினமார்ப்பதஞ்சேர்ப்பர்திண்டே
ரைவருதர்மங்களினம்வந்தார்பபவனைகின்றதே. ௯௭

இன்றுசெய்வோமிதனிற்றிருவேகம்பர்க்கெத்தனையு
நன்றுசெய்வோமபணிநாளையென்றுள்ளிநெஞ்சேயுடலிற்
சென்றுசெயாரைவிடுந்துணைநாளும்விடாதடிமை
நின்றுசெய்வாரவர்தங்களினீணெறிகாட்டுவரே. ௯௮

காட்டவைத்தார்தம்மையாமிடிப்பூப்பெய்யக்காலவெள்ள
மீட்டிவைத்தார்தொழுவேகமபரேதுமிலர்தவெம்மைப்
பூட்டிவைத்தார்தமககன்பதுபெற்றுப்பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத்தார்பரவித்தொழுதாமவர்பாதங்களே. ௯௯

பாதம்பரவியோர்ப்பித்துப்பிதற்றியும்பல்பிணியும்
மேதம்புகுதாவகையருளேகமபரேத்தெனவே
போதம்பொருளாற்பொலியாதபுன்சொற்பனுவல்களும்
வேதம்பொலியும்பொருளா மெனக்கொள்வர்மெய்த்தொண்டரே. ௱

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

## பட்டணத்துப்பிள்ளையார்

# திருப்பாடற்றிரட்டு.

முதலாவது

## கோயிற்றிருவகவல்.

நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
அலகைத்தேரி னலமருகாலின்
உலகப்போய்வாழ்க்கையை யுடலையோம்பற்க
பிறந்தனவிறக்கு மிறந்தனபிறக்கும்
தோன்றினமறையு மறைந்தனதோன்றும்
பெருத்தனசிறுக்குஞ் சிறுத்தனபெருக்கும்
உணர்ந்தனமறக்கு மறந்தனவுணரும்
புணர்ந்தனபிரியும் பிரிந்தனபுணரும்
அருந்தினமலமாம் புனைந்தனவழுக்காம்
உவப்பனவெறுப்பாம் வெறுப்பனவுவப்பாம்
என்றினையனைத்து முணர்ந்தனையன்றியும்
பிறந்தனபிறந்தன பிறவிகடோறும்
கொன்றனையனைத்து மனைத்துநினைத்தின்றன
தின்றனையனைத்து மனைத்துநினைத்தின்றன
பெற்றனையனைத்து மனைத்துநினைப்பெற்றன
ஓம்பினையனைத்து மனைத்துநினையோம்பின
செல்வத்துக்களித்தனை தரித்திரத்தழுங்கினை
சுவர்க்கத்திருந்தனை நரகிற்கிடந்தனை
இன்பமுந்துன்பமு மிருநிலத்தருந்தினை
ஒன்றொன்றொழியா துற்றனையன்றியும்
புற்புதக்குரம்பைத் துச்சிலொதுக்கிடம்
என்னநின்றியங்கு மிருவினைக்கூட்டைக்
கல்லினும்வலிதாக் கருதினையிதனுள்
பூளையுமநீறும் புறப்படுமொருபொறி
மீளுங்குறும்பி வெளிப்படுமொருபொறி
சளியுநீருந் தவழுமொருபொறி
உமிழ்நீர்கோழை யொழுகுமொருபொறி

வளியுமலமும் வழங்குமொருபொறி
சலமுஞ்சீயுஞ் சரியுமொருவழி
உள்ளுறத்தொடங்கி வெளிப்படுநாளுஞ்
சட்டகமுடிவிற் சுட்டெலும்பாகும்
உடலுறுவாழ்க்கையை யுள்ளுறத்தேர்ந்து
கடிமலர்க்கொன்றைச் சடைமுடிக்கடவுளை
ஒழிவருஞ்சிவபெரும் போகவின்பத்தை
நிழலெனக்கடவா நீர்மையொடுபொருந்தி
எனதறநினைவற விருவினைமலமற
வரவொடுசெலவற மருளறவிருளற
இரவொடுபகலற விகபரமறவொரு
முதல்வனைத்தில்லையுண் முளைத்தெழுஞ்சோதியை
அம்பலத்தரசனை யானந்தக்கூத்தனை
நெருப்பினிலரக்கென நெக்குநெக்குருகித்
திருச்சிற்றம்பலத் தொளிருஞ்சிவனை
நினைமினமனனே நினைமினமனனே
சிவபெருமானைச் செம்பொனம்பலவனை
நினைமினமனனே நினைமினமனனே
காதளவோடிய கலகப்பாதகக்
கண்ணியர்மருங்கிற் புண்ணுடனுடங்குங்
காதலுங்கருத்து மல்லானிருதாட்
பங்கயஞ்சூடப் பாக்கியஞ்செய்யாச்
சங்கடங்கூரத் தமியேனையாங்கிருந்
தங்கோடிகோட லமருங்கள்வர்
ஐவர்கலகமிட் டலைக்குங்கானகஞ்
சலமலப்பேழை யிருவினைப்பெட்டகம்
வாதபித்தங்கோழை குடிபுகுஞ்சீறூர்
ஊத்தைப்புன்றோ லுதிரக்கட்டளை
நாற்றப்பாண்ட நான்முழத்தொன்பது
பீற்றற்றுண்டம் பேய்ச்சுரைத்தோட்டம்
அடலைப்பெரிய சுடலைத்திடருள்
ஆசைக்கயிற்றி லாடும்பம்பரம்
ஓயாநோய்க்கிட மோமாக்கலம்
மாயாவிகார மரணப்பஞ்சரம்
சோற்றுத்துருத்தி தூற்றும்பத்தம்
காற்றிற்பறக்குங் காணப்பட்டம்

விதிவழித்தருமன் வெட்டுங்கட்டை
சதுர்முகப்பாணன் றைக்குஞ்சட்டை
ஈமக்கனலி லிடுசிலவிருந்து
காமக்கனலிற் கருகுஞ்சருகு
இருமிகிண்டுங் கிழஞ்சருமி
பவக்கொழுந்தேறுங் கவைக்கொழுகொம்பு
மணமாய்நடக்கும் வடிவின்முடிவிற்
பிணமாய்க்கிடக்கும் பிண்டம்பிணமே
ஊரிற்கிடக்க வொட்டாவுபாதி
காலெதிர்குவிந்த பூளைகாலைக்
கதிரெதிர்ப்பட்ட கடும்பனிக்கூட்டம்
அந்தரத்தியங்கு மிந்திரசாபம்
அதிருமேகத் துருவினுநிழல்
நீரிற்குமிழி நீர்மேலெழுத்து
கண்டுயில்கனவிற் கண்டகாட்சி
அதனினும்பொல்லா மாயககளங்கம்
அமையுமமையும் பிரானேயமையும்
இமையவல்லி வாழியென்றேத்த
ஆனந்தத்தாண்டவங்காட்டி
ஆண்டுகொண்டருள்கை நின்னருளினுக்கழகே.

மூன்றாவது

## கோயிற்றிருவகவல்.

பாற்கடல்கடையப் படுங்கடுவெண்ணெயைத்
திருமிடற்றடக்கிய சிவனேயடைக்கலம்
அடங்கலுமடங்கிடுங் கடுங்கொலைக்காலனைக்
காலெடுத்தடக்கிய கடவுணின்னடைக்கலம்
உலகடங்கலும்படைத் துடையவன்றலைபறித்
திடக்கையிலடக்கிய விறைவநின்னடைக்கலம்
செய்யபொன்னம்பலச் சேவநின்னடைக்கலம்
ஐயநின்னடைக்கல மடியநின்னடைக்கலம்
மனவழியலைந்திடுங் கனவெனும்வாழ்க்கையும்
விழுப்பொருளறியா வழக்குறுமனனும்
ஆணவமலத்துதித் தனைந்திலுலைந்திடு
நிணவைப்புழுவென நெளிக்கிடுசிந்தையும்
படிறும்பாவமும் பழிப்புறுநினைப்பும்

தவறுமழுக்கா றுமிவருபொச்சாப்பும
கவடும்பொய்யுஞ் சுவடும்பெருஞ்சின
னிகலுங்கொலையு மிழிப்புறுபுன்மையும்
பகையுமச்சமுந் துணிவும்பனிப்பும்
முக்குணமடமையு மைப்பொறிமயக்கமும்
இடும்பையும்பிணியு மிடுக்கியவாக்கையை
உயிரெனுங்குருகுவிட் டோடுங்குரம்பையை
எலும்பொடுநரம்புகொண் டிடையிற்பிணித்துக்
கொழுந்தசைமேய்ந்து மொழுக்குவிழுங்குடிலைச்
செழும்பெழுவுதிரச் சிறுபுழுக்குரம்பையை
மலவுடற்குடத்தைப் புலவுடற்புட்டிலைத்
தொலைவிலாச்சோற்றுத் துன்பக்குழியைக்
கொலைபடைக்கலம்பல கிடைக்குங்கூட்டினை
சலிப்புறுவினைப்பல சரக்குக்குப்பையைக்
கோட்சரக்கொழுகும் பீறற்கோணியைக்
கோபத்தீமூட்டுங் கொல்லன்றுருத்தியை
ஐம்புலப்பறவை யடையும்பஞ்சரத்தைப்
புலராக்கவலை விளமரப்பொதும்பை
ஆசைக்கயிற்றி லாடும்பம்பரத்தைக்
காசிற்பணத்திற் சுழலுங்காற்றாடியை
மக்கள்வினையின் மயங்குந்திகிரியைக்
கடுவெளியுருட்டி யசகடக்காலைப்
பாவச்சரக்கொடு பவக்கடல்புக்குக் ·
காமக்காற் றெடுத்தலைப்பக்
கெடுவழிக்கரைசேர் கெடுமரக்கலத்தை
இருவினைவிலங்கொடு மியங்குபுற்கலனை
நமனென்வந்தழைத்திட நடுங்கிடும்யாக்கையைப்
பிணமெனப்படுத்தியான் புறப்படும்பொழுதுநின்
னடிமலர்க்கமலத் துக் கபயநின்னடைக்கலம்
வெளியிடையுருமிடி யிடித்தெனவெறித்தெழுங்
கடுநடைவெள்விடைக் கடவுணின்னடைக்கலம்
இமையாநாட்டத் திறையேயடைக்கலம்
அடியாற்கெளியா யடைக்கலமடைக்கலம்
மறையவர்தில்லை மன்றுணின்றாடிக்
கருணைமொண்டலையெறி கடலேயடைக்கலம்
தேவருமுனிவருஞ் சென்றுநின்றேத்தப்

பாசிழைக்கொடியொடு பரிந்தருள்புரியும்
எம்பெருமானின் னிணையடிக்கபயம்
அம்பலத்தரசே வடைக்கலமுனக்கே

## நான்காவது

## கச்சித்திருவகவல்

திருமால்பயந்த திசைமுகனமைத்து
வருமேழ்பிறவியு மானுடத்துதித்து
மலைமகள்கோமான மலரடியிறைஞ்சிக்
குலவியசிவபதங் குறுகாதவமே
மாதரைமகிழ்ந்து காதல்கொண்டாடும்
மானிடர்க்கெல்லாம் யானெடுத்துரைப்பேன்
விளிவெளிமாக்க டெளிவுறக்கேண்மின்
முள்ளுங்கல்லு முயன்றுநடக்கும
உள்ளங்காலைப் பஞ்செனவுணர்த்தும்
வெள்ளெலும்பாலே மேவியகணைக்காற்
றுள்ளும்வராலெனச் சொல்லித்துதிக்கும
தசையுமெலும்புந் தக்கபுன்குறங்கை
இசையுங்கதலித் தண்டெனவியம்பியும்
நெடுமுடைநாறுங்கி நின்றிடுமிடையைத்
துடிபிடியென்று சொல்லித்துதித்தும்
மலமுஞ்சலமும் வழும்புந்திரையும்
அலையும்வயிற்றை யாலிலையென்றும்
சிலந்திபோலக் கிளைத்துமுன்னெழுந்து
திரண்டுவிம்மிச் சீப்பாய்ந்தேறி
உகிராற்கீற வுலர்ந்துள்ளுருகி
நகுவார்க்கிடமாய் நான்றுவற்றும்
முலையைப்பார்த்து முளரிமொட்டென்றும்
குலையுங்காமக் குருடர்க்குரைப்பேன்
நீட்டவுமுடக்கவு நெடும்பொருள்வாங்கவும்
ஊட்டவும்பிசையவு முதவியிங்கியற்று
அங்கையைப்பார்த்துக் காந்தளென்றுரைத்தும்
வேர்வையுமழுக்கு மேவியகழுத்தை
பாரினினிய கமுகெனப்பகர்ந்தும்

வெப்புழுத்தையு மேவியவாயைத்
துப்புமுரிக்கின றாய்மலவொனணும
அன்னமுங்கறியு மசைவிட்டிறக்கும
முன்னியபல்லை முத்தெனமொழிந்தும
நீருஞ்சளியு நின்றுநின்றொழுகும
கூரியமூக்கைக் குமிழெனக்கூறியும்
தண்ணீர்பீளை தவிராதொழுகும்
கண்ணைப்பார்த்துக் கழுநீரென்றும்
உள்ளுங்குழம்பி யொழுகுங்காதை
வள்ளைத்தண்டினை வளமெனவாழ்த்தியும்
கையுமெண்ணையுங் கலவாதொழியில
வெய்யவகரும பேனுமவிளையத
தக்கதலையோட்டின் முளைத்தெழுந்த
சிக்கினமயிரைத் திரணமுகிலென்றும
சொற்பலபேசித் துதித்துநீங்கள்
நச்சிச்செல்லு நரகவாயில்
தோலுமிறைச்சியுந் துதைந்துசீப்பாயும்
காமப்பாழி கருவிளைகழனி
தூமைக்கடவழி தொலைபெறுவாயில்
எண்சாணுடம்பு மிழியும்பெருவழி
மண்பாற்காமங் கழிக்குமறைவிடம
நச்சிக்காமுக ருயகாயென்றும்
இச்சித்திருக்கு மிடைகழிவாயில்
திங்கட்சடையோன் றிருவருளில்லார்
தங்கித்திரியும் சவலைப்பெருவழி
புண்ணிதுவென்று புடைவையைமூடி
உண்ணீர்பாயு மோசைச்செழும்புண்
மால்கொண்டறியா மாந்தர்புகுவழி
கோய்கொண்டொழியா நுண்ணியர்போம்வழி
தருக்கியகாமுகர் சாரும்படுகுழி
செருக்கியகாமுகர் சேருஞ்சிறுகுழி
பெண்ணுமாணும் பிறக்கும்பெறுவழி
மலஞ்சொரிந்திழியும் வாயிற்கருகே
சலஞ்சொரிந்திழியுந் தண்ணீர்வாயில்
இத்தைநீங்க ளினிதெனவேண்டா

பச்சிலையிட்டினும் பத்தர்க்கிரங்கி
மெச்சிச்சிவபத வீடருள்பவனை
முத்திநாதனை மூவர்முதல்வனை
அண்டரண்டமு மனைத்துளபுவனமுங்
கண்டவண்ணலைக் கச்சியிற்கடவுளை
ஏகநாதனை யிணையடியிறைஞ்சுமின
போகமாதரைப் போற்றுதலொழிந்தே

திருச்சிற்றம்பலம்

---

அறந்தானியற்றுமவனிலுங்கோடி யதிகமில்லந்
துறந்தானவனிற்சதகோடி யுள்ளத்துறவுடையோன்
மறந்தானறக்கற்றறிவோடிருந்திருவாதனையற்
றிறந்தானபெருமையையெனசொல்லுவேன்கச்சியேகம்பனே. (க)

கட்டியணைத்திடுமபெண்டிருமக்களுங்காலத்தச்சன
வெட்டிமுறிக்குமரமபோற்சரீரத்தைவீழ்த்திவிட்டார்
கொட்டிமுழக்கியழுவார்மயானங்குறுகியபபா
லெட்டியடிவைபபரோவிறைவாகசசியேகமபனே (உ)

கைப்பிடிநாயகன்றூங்கையிலேயவனகையையெடுத்
தப்புறந்தன்னிலசையாமனமுன்வைத்தயல்வளவி
லொப்புடனசென்றுதுயினீத்துபின்வந்துறங்குவளை
யெப்படிநானம்புவேனிறைவாகச்சியேகம்பனே (ங)

நன்னாரிற்பூட்டியசூஸ்திரப்பாவைநன்னார்தப்பினும்
றன்னாலுமாடிச்சலித்திடுமோவந்தத்தன்மையைப்போ
லுன்னாலியானுந்திரிவதெல்லான்மற்றுனைபிரிந்தா
லென்னாலிங்காவதுண்டோவிறைவாகச்சியேகம்பனே (ச)

நல்லாரிணக்கமுநின்பூசைநேசமுஞானமுமே
யல்லாதுவேறுநிலையுளதோவகமுமபொருளு
மில்லாளுஞ்சுற்றமுமைந்தருமவாழ்வுமெழிலுடமபு
மெல்லாமவெளிமயக்கேயிறைவாகசசியேகம்பனே (ரு)

பொல்லாதவனெறியில்லாதவனைம்புலன்கட்டமை
யில்லாதவனகல்விகல்லாதவனமெய்யடியவர்பாற

செல்லாதவனுண்மைசெல்லாதவனின்றிருவடிக்கன்
பில்லாதவன்மண்ணிலேன்பிறந்தேன்கச்சியேகம்பனே (௬)

பிறக்கும்பொழுதுகொடுவந்ததில்லைப்பிறந்துமண்மே
லிறக்கும்பொழுதுகொடுபோவதில்லையிடைநடுவிற்
குறிக்குமிச்செல்வம்சிவன்றந்ததென்றுகொடுக்கறியா
திறக்குங்குலாமருக்கென்சொல்லுவேன்கச்சியேகம்பனே (௭)

அன்னவிசாரமதுவேவிசாரமதுவொழிந்தாற்
சொன்னவிசாரந்தொலையாவிசாரநற்றோகையரைப்
பன்னவிசாரம்பலகால்விசாரமிப்பாவிநெஞ்சுக
கென்னவிசாரம்வைத்தாயிறைவாகச்சியேகம்பனே (௮)

கல்லாப்பிழையுங்கருதாப்பிழையுங்கசிந்துருகி
நில்லாப்பிழையுநினையாப்பிழையுநின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந்துதியாப்பிழையுந்தொழாப்பிழையு
மெல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே (௯)

மாயநட்போரையுமாயாமலமெனுமாதரையும்
வீயவிட்டோட்டிவெளியேபுறப்பட்டுமெய்யருளாந்
தாயுடன்சென்றுபின்றாதையைக்கூடிப்புன்றாயைமறந்
தேயுமதேநிட்டையென்றனெழிற்கச்சியேகம்பனே (௰)

வரிக்கோலவேல்விழியாரனுராகமயக்கிற்சென்று
சரிக்கோதுவேனெழுத்தஞ்சுஞ்சொலேன்றமியேனுடல்
நரிக்கோகழுகுபருந்தினுக்கோவெய்யகாயந்தனக்கோ
வெரிக்கோவிரையமதுக்கோவிரைவாய்கச்சியேகம்பனே (௧௧)

காதென்றுமூக்கென்றுகண்ணென்றுகாட்டியென்கண்ணெதிரே
மாதென்றுசொல்லிவருமாயைதன்னைமறலிவிட்ட
தூதென்றெண்ணாமல்சுகமென்றுநாடுமித்துற்புத்தியை
யேதென்றெடுத்துரைப்பேனிறைவாகச்சியேகம்பனே (௧௨)

ஊருஞ்சதமல்லவுற்றார்சதமல்லவுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்லபெண்டீர்சதமல்லபிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்லசெல்வஞ்சதமல்லதேசத்திலே
யாருஞ்சதமல்லநின்றாள்சதங்கச்சியேகம்பனே (௧௩)

சிறும்வினையதுபெண்ணுருவாகித்திரண்டுருண்டு
கூறுமுலையுமிறைச்சியுமாகிக்கொடுமையினாற்
பீறுமலமுமுதிரமுஞ்சாயும்பெருங்குழியிட்
டேறுங்கரைகண்டிலேனிறைவாகச்சியேகம்பனே. ௧௪

பொருளுடையோரைச்செயலினும்வீரரைப்போர்க்களத்துந்
தெருளுடையோரைமுகத்தினுந்தேர்ந்துதெளிவதுண்டோ
லருளுடையோரைத்தவத்திற்குணத்தினருளிலன்பு
மிருளறுசொல்லினுங்காணத்தகுங்கச்சியேகம்பனே. ௧௫

பருத்திப்பொதியினைப்போலேவயிறுபருக்கத்தங்க
டுருத்திக்கருசுவைபோடுகின்றார்துறந்தோர்தமக்கு
வருத்தியமுதிடமாட்டாரவரையிம்மானிலத்தி
லிருத்திக்கொண்டேனிருந்தாரிறைவா கச்சியேகம்பனே. ௧௬

பொல்லாவிருளகற்றுங்கதிர்கூகையெனபுட்கண்ணினுக்
கல்லாயிருந்திடுமாறொக்குமேயறிவோருளத்தி
வல்லாரறியவாரறியார்தமக்குமயக்கங்கண்டா
யெல்லாம்விழிமயக்கேயிறைவா கச்சியேகம்பனே. ௧௭

வாதுக்குச்சண்டைக்குப்போவர்வருவாவழக்குரைப்பர்
தீதுக்குதவியுஞ்செய்திடுவார்தினந்தேடியொன்று
மாதுக்களித்துமயக்கிடுவார்விதியாளுமட்டு
மேதுக்கிவர்பிறந்தாரிறைவா கச்சியேகம்பனே. ௧௮

ஓயாமற்பொய்சொல்வர்நல்லோரைநிந்திப்பருற்றுப்பெற்ற
தாயாரைவைவர்சதியாயிரஞ்செய்வர்சாஸ்திரங்க
ளாயார்பிறர்க்குபகாரஞ்செய்யார்தமையண்டினர்க்கொன்
றீயாரிருந்தென்னபோயென்னகாண் கச்சியேகம்பனே. ௧௯

அப்பென்றும்வெண்மையதாயினுமாங்கந்நிலத்தியல்பாய்த்
தப்பின்றியேகுணவேற்றுமைதான்பலசார்தலினாற்
செப்பிலபக்குவம்பக்குவமாயுள்ளசீவனிலு
மிப்படியேநிற்பனெந்தைபிரான்கச்சியேகம்பனே. ௨௰

நாயாய்ப்பிறந்திடினல்வேட்டையாடிநயம்புரியுந்
தாயார்வயிற்றினரராய்ப்பிறந்துபின்சம்பன்னராய்க்
காயாமரமும்வறளாங்குளமுங்கல்லாவுமென்ன
வீயாமனிதரையேன்படைத்தாய் கச்சியேகம்பனே. ௨௧

ஆற்றிற்கரைத்தபுளியாக்கிடாமலென்னன்பையெல்லாம்
போற்றித்திருவுளம்பற்றுமையாபுரமூன்றெறித்துக்
கூற்றைப்பணிகொளுந்தாளுடையாய்குன்றவில்லுடையா
யேற்றுக்கொடியுடையாயிறைவா கச்சியேகம்பனே. ௨௨

பெண்ணாகிவந்தொருமாயப்பிசாசம்பிடித்திட்டென்னைக்
கண்ணாலுருட்டிமுலையான்மயக்கிக்கடிதடத்துப்

புண்ணாங்குழியிடைத்தள்ளியென்போதப்பொருள்பறிக்க
வெண்ணாதுனைமறந்தேனிறைவாகச்சியேகம்பனே. உ

காவாறவேண்டும்விதனுசொல்லுவாருனைநான்பிரிந்தாற்
சாவேனென்றேயிருந்தொசுகவுண்பார்கள்கைதான்வறண்டாற்
போய்வாருமெனாதடுத்தலைக்கேகுடமும்பூவையருக்
கேயார்தலைவிதியோவிறைவாகச்சியேகம்பனே. உ௪

கல்லார்சிவகதைநல்லோர்தமக்குக்கனவிலுமெய்
சொல்லார்பசித்தவர்க்கன்னங்கொடார்குருசொன்னபடி
நில்லாரறத்தைநினையார்நின்னாமநினைவிசற்று
மில்லாரிருந்தெனனிறந்தென்புகல்கச்சியேகம்பனே. உ௫

வானமுதத்தின்சுவையறியாதவர்வண்கனியின்
றேனமுதத்தின்சுவையெண்ணல்போலத்தனித்தனியே
தேனமுதத்தினைத்தெளிவாயஞானஞ்சிறிதுமில்லார்க்
கீனமுதச்சுவைநன்றல்லவோகச்சியேகம்பனே. உ௬

ஊற்றைச்சரீரத்தையாபாசக்கொட்டிலையூன்பொதிந்த
பீற்றற்றுருத்தியைச்சோறிடுந்தோற்பையைப்பேசரிய
காற்றிற்பொதிந்தநிலையற்றபாண்டத்தைக்காதலசெய்தே
யேற்றுத்திரிந்துவிட்டேனிறைவாகச்சியேகம்பனே. உ௭

சொல்லால்வருங்குற்றஞ்சிந்தையால்வருந்தோடஞ்செய்த
பொல்லாததீவினைபார்வையிற்பாவங்கள்புண்ணியநூ
லல்லாதகேள்வியைக்கேட்டிடுதீங்குகளாயவுமற்
றெல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே. உ௮

முட்டற்றமஞ்சளையெண்ணெயிற்கூட்டிமுகமினுக்கி
மெட்டிட்டுப்பொட்டிட்டுப்பித்தளையோலைவிளக்கியிட்டுப்
பட்டப்பகலில்வெளிமயக்கேசெயும்பாவையர்மே
லிட்டத்தைநீதவிர்ப்பாயிறைவாகச்சியேகம்பனே. உ௯

பிறந்துமண்மீதிற்பிணியேகுடிகொண்டுபேரின்பத்தை
மறந்துசிற்றின்பத்தின்மேன்மயலாகிப்புன்மாதருக்குட்
பறந்துழன்றேதடுமாறிப்பொன்றேடியப்பாவையர்க்கீந்
திறந்திடவோபணித்தாயிறைவாகச்சியேகம்பனே. ௩௰

பூதங்களற்றுப்பொறியற்றுச்சாரம்புலன்களற்று
பேதங்குணமற்றுப்பேராசைதானற்றுப்பின்முனற்றுக்
காதங்கரணங்களுமற்றவானந்தக்காட்சியிலே
யேதங்களைந்திருப்பேனிறைவாகச்சியேகம்பனே. ௩௧

கல்லாரெனக்குமனுவொன் றுதந்தருண்ஞானமிலாப்
பொல்லாவெனைக்கொன்றுபோகுமபொழுதியல்பூசைசெபஞ்
சொல்லார்நற்கோயினியமம்பலவகைத்தோத்திரமு
மெல்லாமுடிந்தபினசொல்லுகண்டாய்கச்சியேகம்பனே. ௯௨

சடக்கடத்துக்கிரைதேடிப்பலவுயிர்தன்னைக்கொன்று
விடக்கடித்துக்கொண்டிறுமாந்திருந்தமிகமெலிந்து
படக்கடித்தின்றுழல்வார்கடமைக்கரம்பற்றிமமன்
னிடக்கடிக்கும்பொழுதேதுசெய்வார்கச்சியேகம்பனே. ௯௩

நாறுமுடலைநரிப்பொதிசோற்றினைநான்றினமுஞ்
சோறுங்கறியுநிறப்பியபாண்டத்தைத்தோகையர்தங்
கூறுமலமுமிரத்தமுஞ்சேருங்குழியில்விழா
தேறும்படியருள்வாயிறைவாகச்சியேகம்பனே. ௯௪

சொக்கிட்டரமனைப்புக்குட்டிருடியர்துட்டர்வந்து
திக்குற்றமன்னரைக்கேட்பதுபோம்சிவநிந்தைசெய்து
திக்குக்குருலிங்கசங்கமநிந்தித்துவீடிச்சிக்கு
மெக்குப்பெருத்தவர்க்கென்சொல்லுவேன்கச்சியேகம்பனே ௯௫

விருந்தாகவந்தவர்தங்களுக்கன்னமிகக்கொடுக்கப்
பொருந்தார்வளம்பெறவாழ்வார்நின்னாமத்தைப்போற்றிநிற்க
மருந்தாமுலைப்பங்கரென்னுதபாதகரம்புவியி
லிருந்தாவதேதுகண்டாயிறைவாகச்சியேகம்பனே. ௯௬

எல்லாமறிந்துபடித்தேயிருந்தெமக்குள்ளபடி
வல்லானறிந்துளனென்றுணராதுமதிமயங்கிச்
சொல்லான்மலைந்துறுசூழ்விதியின்படிதுக்கித்துப்பி
னெல்லாஞ்சிவன்செயலேயென்பர்காண்கச்சியேகம்பனே. ௯௭

பொன்னைநினைந்துவெகுவாகத்தேடுவர்பூவையன்று
டன்னைநினைந்துவெகுவாயுருகுவர்தாரணியி
லுன்னைநினைந்திங்குனைப்பூசியாதவுலுத்தரெல்லா
மென்னையிருந்துகண்டாயிறைவாகச்சியேகம்பனே. ௯௮

கடுஞ்சொல்லின்வம்பரையீனரைக்குண்டரைகாமுகரைக்
கொடும்பவமேசெயுகிர்மூடர்தம்மைக்குவலயத்து
னெடும்பனைபோலவளர்ந்துநல்லோர்தநெறியறியா
விடும்பரையேன்படைத்தாயிறைவாகச்சியேகம்பனே. ௯௯

கொன்றேனனேகமுயிரையெல்லாம்பின்புகொன்றுகொன்று
தின்றேனதன்றியுந்தீங்குசெய்தேனதுதீர்க்கவென்றே
நின்றேநின்சந்நிதிக்கேயதனுற்குற்றநீபொறுப்பா
யென்றேயுனைநம்பினேனிறைவாகச்சியேகம்பனே. ௱

அன்னையெத்தனை யெத்தனையன்னையோ வப்பனெத்தனை யெத்த
னையப்பனோ, பின்னையெத்தனை யெத்தனைபெண்டிரோ பிள்ளையெத்

தனை யெத்தனைபிள்ளையோ, முன்னையெத்தனை யெத்தனைஜென்மமோ
மூடனாயடியேனுமறிந்திலே. னின்னமெத்தனை யெத்தனைசென்மமோ
வென்செய்வேன்கச்சி யேகம்பநாதனே.

## திருத்தில்லை.

காம்பிணக்கும்பணைத்தோளார்க்கும்பொன்னுக்குக்காசினிக்கும்
தாம்பிணங்கும் கலவாசையுமவிட்டுத்தனித்துச்செத்துப்
போம்பிணந்தன்னைத்திரளாகக்கூடிப்புரண்டினிமேற்
சாம்பிணங்கத்துதையோவென்செய்வேன்றில்லைச்சங்கரனே. ௧

சோறிடுநாடுதுணிதரும்குப்பைதொண்டன்பரைக்கண்
டேறிடுங்கைகளிறங்கிடுந்தீவினையெப்பொழுது
நீறிடும்மணியர்சிற்றம்பலவர்நிருத்தங்கண்டா
றிடுங்கண்களுருகிடுநெஞ்சமென்னுள்ளமுமே. ௨

அழலுக்குள்வெண்ணெயெனவேயுருகிப்பொன்னம்பலத்தார்
நிழலுக்குணின்றுதவமுஞற்றாமனிட்டேரமின்றாய்
குழலுக்கிசைந்தவகைமாலைக்கொண்டுகுற்றேவல்செய்து
விழலுக்குமுத்துலையிட்டிறைத்தேனென்விதிவசமே. ௩

ஓடாமற்பாழுக்குழையாமலோரமுரைப்பவர்பாற்
கூடாமனல்லவர்கூட்டம்விடாமல்வெங்கோபநெஞ்சி
னாடாமனன்மைவழுவாமலின்றைக்குநாளைக்கென்று
தேடாமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே. ௪

பாராமலேற்பவர்க்கில்லையென்னாமற்பழுதுசொல்லி
வாராமற்பாவங்கள்வந்தணுகாமன்மனமயர்ந்து
பேராமற்சேவைபிரியாமலன்புபெறாதவரை
சேராமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே. ௫

தொல்லாமற்சொன்றதைத்தின்னாமற்குத்திரங்கோள்களவு
கல்லாமற்கைதவரோடிணங்காமற்கனவிலும்பொய்
செல்லாமற்சொற்களைக்கேளாமற்றோகையர்மாயையிலே
சொல்லாமற்செல்வந்தருவாய்சிதம்பரதேசிகனே.

முடிசார்ந்தமன்னருமற்றுமுள்ளோருமுடிவிலொரு
பிடிசாம்பலாய்வெந்துமண்ணாவதுங்கண்டுபின்னுமிந்தப்
படிசார்ந்தவாழ்வைநினைப்பதல்லாற்பொன்னினம்பலவ
ரடிசார்ந்துநாமுய்யவேண்டுமென்றேயறிவாரில்லையே. ௭

காலையுபாதிமலஞ்சலமாமன்றிக்கட்டுச்சியிற்
சாலவுபாதிபசிதாகமாகுமுற்சஞ்சிதமா
மாலையுபாதித்துயில்காமமாயிவைமாற்றிவிட்டே
யாலமுகக்கருளம்பலவாவென்னையாண்டருளே. ௮

ஆயும்புகழ்தில்லையம்பலவாணருகிற்சென்றாற்
பாயுமிடபங்கடிக்குமரவம்பின்பற்றிச்சென்றாற்
பேயுங்கணமும்பெருந்தலைப்பூதமும்பின்றொடரும்
போவென்செய்வாய்மனமேபிணக்காடவர்போமிடமே. ௯

ஓடுமெடுத்தளாடையுஞ்சுற்றியுலாவிமெள்ள
வீடுகடோறும்பலிவாங்கியேவிதியற்றவர்போ
லாடுமருட்கொண்டிக்கமபலத்தேநிற்குமாண்டிதன்னைத்
தேடுங்கணக்கென்னகாண்சிவகாமசவுந்தரியே. ௰

ஊட்டுவிப்பானுமுறக்குவிப்பானுமிங்கொன்றொடொன்றை
மூட்டிவிப்பானுமுயக்குவிப்பானுமுயன்றவினை
காட்டுவிப்பானுமிருவினைப்பாசக்கயிற்றின்வழி
யாட்டுவிப்பானுமொருவனுண்டேதில்லையம்பலத்தே. ௰௧

அடியார்க்கெளியவரம்பலவாணரடிபணிந்தான்
மடியாமற்செல்வவரமபெறலாமவையமேழளந்த
நெடியோனும்வேதனுங்காணாதநித்தநிமலனருட்
குடிகாணுநாங்களவர்காணுமெங்கள்குலதெய்வமே. ௰௨

தெய்வச்சிதம்பரதேவாவுன்சித்தந்திரும்பிவிட்டாற்
பொய்வைத்தசொப்பனமாமன்னர்வாழ்வும்புவியுமெங்கே
மெய்வைத்தசெல்வமெங்கேமணடலீகர்தமமேடையெங்கே
கைவைத்தநாடகசாலையெங்கேயிதுகண்மயக்கே. ௰௩

உடுப்பானுமபாலனனமுண்பானுமுய்வித்தொருவர்தம்மைக்
கெடுப்பானுமேதென்றுகேள்விசெய்வானுங்கெதியடங்கக்
கொடுப்பானுங்கேகிழியென்றேற்பானுமேமற்கக்கொடாமனின்று
தடுப்பானுநீயல்லையோதில்லையாளந்தத்தாண்டவனே.

வித்தாரம்பேசினுஞ்சோங்கேறினுங்கம்பமீதிருந்து
தத்தாவென்றோதிபபவுரிகொண்டாடினுந்தம்முன்றம்பி
யொத்தாசைபேசினுமாவதுண்டோதில்லையுண்ணிறைந்த
கத்தாவின்சொற்படியல்லாதுவேறில்லைகன்மங்களே. ௰௫

பிறவாதிருக்கவரந்தரல்வேண்டும்பிறந்துவிட்டா
லிறவாதிருக்கமருந்துண்டுகாணிதுவெப்படியோ
வறமார்புகழ்த்தில்லையம்பலவாணரடிக்கமல
மறவாதிருமனமேயதுகாணன்மருந்துனக்கே. ௰௬

கவியாதிருநெஞ்சமேதில்லைமேவியசங்கரனைப்
புவியார்ந்திருக்கின்றஞானாகரனைப்புராந்தகனை

யவியாவிளக்கையென்னம்பலத்தாடியையைத்தொழுதாற்
செவியாமனிசெவித்தாற்பிறவாமுத்திசித்திக்குமே. ௰௭

காவின்மறைப்பொருளம்பலவாணரைநம்பியவர்
பாவிலொருதரஞ்சேவிக்கொணாதிருப்பார்க்கருங்கல்
மேவியெடுத்தவர்கைவிலங்கைக்கைதைப்பர்மீண்டுமொரு
காவினிறுத்தவர்கிட்டியுந்தாமவர்துகட்டுவரே. ௰௮

ஆற்றோடுதும்பையணிந்தாடுமம்பலவாணர்தமைப
போற்றாதவர்க்கடையாளமுண்டேயிந்தப்பூதலத்திற்
சோற்றாவியற்றுச்சுகமற்றுச்சுற்றத்துணியுமற்றே
யேற்றாலும்பிச்சைகிடையாமலக்கற்றிருப்பார்களே. ௰௯

அத்தனைமுடபத்துமுக்கோடிதேவர்க்கதிபதியை
சித்தனையம்மைசிவகாமசுந்தரிநேசனையெங்
கத்தனைப்பொன்னம்பலத்தாடுமையனைக்காணக்கண்க
ளெத்தனைகோடியுகமோதவஞ்செய்திருக்கின்றவே ௨௰

திருச்செங்காடு.

நெருப்பானமேனியர்செங்காட்டிலாத்திநிழலருகே
யிருப்பார்திருவுளமெப்படியோவின்னமென்னையன்னைக்
கருப்பாசயக்குழிக்கேதள்ளுமோகண்ணைக்காணரிய
திருப்பாதமேதருமோதெரியாதுசிவன்செயலே. ௧

திருவொற்றியூர்.

ஐயுந்தொடர்ந்துவிழியுஞ்சொருகியறிவழிந்து
மெய்யும்பொய்யாகிவிடுகின்றபோதொன்றுவேண்டுவன்யான்
செய்யுந்திருவொற்றியூருடையீர்திருநீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணியைந்தெழுத்தோதவுங்கற்பியுமே. ௧

சுடப்படுவாரறியார்புரமூன்றையுஞ்சுட்டபிரான்
இடப்படுமோமதிற்றென்னொற்றியூரனெருப்பறப்பி
னடப்பவர்பொற்பதந்தலைமேற்படவுநன்குநண்ணி
யிடப்படுகாண்மணமேவிதியேட்டைக்கிழிப்பதுவே. ௨

திருவிடைமருதூர்

காடேதிரிந்தென்னகாற்றேபுசித்தென்னகந்தைசுற்றி
யோடேயெடுத்தென்னவுள்ளன்பிலாதவரோங்குவிண்ணோர்
நாடேயிடைமருதீசர்க்குமெய்யன்பர்நாரியர்பால்
வீடேயிருப்பினுமெய்ஞ்ஞானவீட்டின்பமேவுவரே. ௩

தாயும்பகைகொண்டபெண்டிர்பெரும்பகைதன்னுடைய
சேயும்பகையுறவோரும்பகையிச்செகமும்பகை

யாயும்பொழுதிலருஞ்செல்வநீங்கிலிங்காகவின்றற்
றேயுநெஞ்சேமருதீசர்பொற்பாதஞ்சத்தியமே. ௯

திருக்கழுக்குன்றம்.

காடோசெடியோகடற்புறமோகனமேமிகுந்த
நாடோநகரோநகர்நடுவோநலமேமிகுந்த
வீடோபுறந்திண்ணையோதமியேனுடல்விழுமிட
நீடோய்கழுக்குன்றிலீசாவுயிர்த்துணைநின்பதமே ௧

திருக்காளத்தி.

பத்தும்புகுந்துபிறந்துவளர்ந்துபட்டாடைசுற்றி
முத்தும்பவளமும்பூண்டோடியாடிமுடிந்தபின்பு
செத்துக்கிடக்கும்பிணத்தருகேயினிச்சாம்பிணங்கள்
கத்துங்கணக்கென்னகாண்கயிலாபுரிக்காளத்தியே ௧

பொன்னாற்பிரயோசனம்பொன்படைத்தாற்குண்டுபொன்படைத்தே
ன்,றன்னாற்பிரயோசனமபொன்னுக்கங்கேதுண்டத்தன்மையைப்போ
லுன்னாற்பிரயோசனம்வேணதெல்லாமுண்டுனைப்பணியு
மென்னாற்பிரயோசனமேதுண்டுகாளத்தியீசுரனே. ௨

வாளான்மகவரிந்தூட்டவல்லேனல்லன்மாதுசொன்ன
சூளாலிளமைதுறக்கவல்லேனல்லன்றொண்டுசெய்து
நாளாறிற்கண்ணிடந்தப்பவல்லேனல்லனானினிச்சென்
றாளாவதெப்படியோதிருக்காளத்தியப்பருக்கே ௩

முப்போதுமன்னம்புசிக்கவுந்தூங்கவுமோகத்தினாற்
செப்போதிளமுலையாருடன்சேரவுஞ்சீவன்விடு
மப்போதுகண்கலக்கப்படவும்மமைத்தாயையனே
யெப்போதுகாணவல்லேன்றிருக்காளத்தியீசுரனே. ௪

இரைக்கேயிரவும்பகலுந்திரிந்திங்கிளைத்துமின்னா
ரரைக்கேயலக்குழியருகேசுகம்பார்த்தொழுகும்
புரைக்கேயுழலுந்தமியேனையாண்டருள்பொன்முகலிக்
கரைக்கேகல்லாலநிழற்கீழமர்ந்தருள்காளத்தியே. ௫

நாறுங்குருதிச்சலதாரைகோற்புரைநாடொறுஞ்சீ
யூறுமலக்குழிகாமத்துவாரமொலித்திடும்புண்
டேறுந்தசைப்பிளப்பந்தரங்கத்துட்சிற்றின்பம்விட்
டேறும்பதந்தருவாய்திருக்காளத்தியீசுரனே. ௬

திருக்கைலாயம்.

காண்சாயும்வெள்ளிமலைக்கரசேநின்கழனம்பினே
னூண்சாயுஞ்செம்மொழிக்கிடுவாய்கரவூரனுக்காய்

மான்சாயச்செங்கைமழுவலஞ்சாயவளைந்தகொன்றைத்
தேனசாயநல்லதிருமேனிசாயச்சிவக்கொழுந்தே. ௧

இல்லந்துறந்துபசிவந்தபோதங்கிரந்துநின்று
பல்லுங்கறையற்றுவெள்ளாயுமாயொன்றிற்பற்றுமின்றிச்
சொல்லும்பொருளுமிழந்துசுகானந்தத்தூக்கத்திலே
யல்லும்பகலுமிருப்பதென்றோகைலாயத்தனே. ௨

சினந்தனையற்றுப்பிரியமுந்தானற்றுச்செய்கையற்று
நினைந்ததுமற்றுநினையாமையுமற்றுநிராசசிந்தனாய்த்
தனந்தனியேயிருந்தானந்தநித்திரைதங்குகின்ற
வனந்தனிலென்றிருப்பேனத்தனேகைலாயத்தனே. ௩

கையாரவேற்றுநின்றங்ஙனந்தின்றுகரித்துணியை
தையாதுடுத்துநின்சந்நிதிக்கேவந்துசந்ததமு
மெய்யாரநிற்பணிந்துள்ளேயுரோமம்விதிர்விதிர்ப்ப
ஐயாவென்றோலமிடுவதென்றோகைலாயத்தனே. ௪

நீறார்த்தமேனியுரோமஞ்சிலித்துளநெக்குநெக்குச்
சேறாய்க்கசிந்துகசிந்தேயுருகிநின்சீரடிக்கே
மாறாதியானமுற்றானந்தமேற்கொண்டுமாரபில்கண்ணீ
ராறாய்ப்பெருகக்கிடப்பதென்றோகைலாயத்தனே. ௫

செல்வரைப்பின்சென்றுசங்கடம்பேசித்தினந்தினமும்
பல்லினைக்காட்டிப்புரிதவியாமற்பரானந்தத்தி
னெல்லையிற்புக்கிடவேகாந்தமாயெனக்காமிடத்தே
யல்லலற்றென்றிருப்பேனத்தனேகைலாயத்தனே. ௬

மந்திக்குருளையொத்தேனில்லைநாயேனவழக்கறிந்தும்
சிந்திக்குஞ்சிந்தையையானென்செய்வேனினைத்தீதகற்றிப்
புந்திப்பரிவிற்குருளையையேந்திப்பூசையைப்போ
லெந்தைக்குரியவனாகாணத்தனேகைலாயத்தனே ௭

வருந்தேனைப்பிறந்துமிறந்துமயக்கும்புலன்வழிபோய்ப்
பொருந்தேனரகிற்புகுகின்றிலேன்புகழ்வாரிடத்தி
லிருந்தேனினியவர்கூட்டமிடேனியலஞ்செழுத்தா
மருந்தேனருந்துவனின்னருளாற்கைலாயத்தனே. ௮

## மதுரை

விடப்படுமோவிப்பிரபஞ்சவாழ்க்கையைவிட்டுமனந்
திடப்படுமோநின்னருளின்றியேதினமேயலையக்
கடப்படுமோவற்பாவாயிலீழுசென்றுகண்ணீர்ததும்பிப்
படப்படுமோசொக்கநாதாசௌந்தரபாண்டியனே.

## பொது

உடைக்கோவணமுண்டுறங்கப்புறந்திண்ணையுண்டுணவிங்
கடைக்காயிலையுண்டருந்தத்தண்ணீருண்டருந்துணைக்கே

விடையேறுமீசர் திருநாமமுண்டிந்தமேதினியில்
வடகோடுயர்ந்தென்னதென்கோடுசாய்ந்தெனவலான்பிறைக்கே. ௧

வீடுநமக்குத்திருவாலங்காடுவிமலர்தந்த
வோடுநமக்குண்டுவற்றாதபாத்திரமோங்குசெல்வ
நாடுநமக்குண்டுகேட்டதல்லாந்தரநன்னெஞ்சமே
யீடுநமக்குச்சொலவோவொருவருமிங்கில்லையே. ௨

நாடிக்கொணடசரைநாட்டமுற்றயிலைநாதரடி
தேடிக்கொணடாடித்தெளிந்தயிலைசெகமாயைவந்து
மூடிக்கொண்டோமென்றுங்காமாயுதக்கண்முனிந்தவென்றும்
பீடிப்பையோநெஞ்சமேயுனைப்போலிலைப்பித்தர்களே. ௩

கையொன்றுசெய்யவிழியொன்றுநாடக்கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்றுவஞ்சகநாவொன்றுபேசப்புலால்கமழு
மெய்யொன்றுசாரசெவியொன்றுகேட்கவிரும்புமியான்
செய்கின்றபூசையெவ்வாறுகொள்வாய்வினைதீர்த்தவனே. ௪

கண்ணுண்டுகாணக்கருத்துண்டுநோக்கக்கசிந்துருகிப்
பண்ணுண்டுபாடசெவியுண்டுகேட்கப்பலச்சிலையா
லெண்ணுண்டுசொத்தவெதிர்நிறகவீசனிருக்கையிலே
மண்ணுண்டுபோகுதையோகெடுவீரிந்தமானிடமே. ௫

சொல்லிலுஞ்சொல்லின்முடிவிலும்வேதச்சுருதியிலு
மல்லிலுமாசற்றவாகாயந்தனிலுமாய்ந்துவிட்டோ
ரில்லிலுமன்பரிடத்திலுமீசனிருக்குமிடங்
கல்லிலுஞ்செம்பிலுமோவிருப்பானெங்கள்கண்ணுதலே ௬

வினைப்போகமேயொருதேகங்கண்டாய்வினைதானொழிந்தாற்
றினைப்போதளவுநில்லாதுகண்டாய்சிவன்பாதநினை
நினைப்போரைமேவுநினையாரைநீங்கிநெறியினின்று
லுனைப்போலொருவருண்டோமனமேயெனக்குற்றவரே. ௭

பட்டைக்கிழித்துப்பருவூசிதன்னைப்பரிந்தெடுத்து
முட்டச்சுருட்டியெனதொய்குழலாள்கையின்முன்கொடுத்துக்
கட்டியிருந்தகனமாயககாரிதனகாமமெல்லாம்
விட்டுப்பிரியவென்றோவிங்ஙனேசிவனமீண்டதுவே. ௮

குதற்றகொங்கையுமாணர்கலவியுஞ்சூழ்பொருளும்
போதுற்றபூசலுக்கென்செயலாஞ்செய்தபுண்ணியத்தாற்
றீதற்றமன்னவன்சிந்தையினின்றுதெளிவதற்கோ
காதற்றவூசியைத்தந்துவிட்டானென்றன்கையிலே. ௯

வாதுற்றதிண்புயரண்ணலுமயிலார்மலர்ப்பதத்தைப்
போதுற்றெப்போதும்புகலுநெஞ்சேயிக்கப்பூதலத்திற்
றீதுற்றசெல்வமெனதேடிப்புதைத்ததிரவியமென்
காதற்றவூசியும்வாராதுகாணுங்கடைவழிக்கே. ௰

வேதத்தினுட்பொருண்மண்ணாசைமங்கையைவிட்டுவிடப்
போதித்தவனமொழிகேட்டிலையோசெய்தபுண்ணியத்தா
லாதித்தனைசந்திரனைபோலேவெளிச்சமதாம்பொழுது
காதற்றவூசியும்வாராதுகாணுங்கடைவழிக்கே. ௧௧

மனையாளுமக்களும்வாழ்வுந்தனமுந்தன்வாசன்மட்டே
வினைமானசுற்றமயானமட்டேவழிக்கேதுதுணை
தினையாமளவெள்ளளவாகிலுமுன்புசெய்ததவந்
தனையாளவென்றும்பரலோகஞ்சித்திக்குஞ்சத்தியமே. ௧௨

அத்தமும்வாழ்வுமகத்துமட்டேவிழியம்பொழுக
மெத்தியமாதருமவீதிமட்டேவிம்மிவிம்மியிரு
கைத்தலமேல்வைத்தழுமைந்தருஞ்சுடுகாடுமட்டே
பற்றிதொடருமிருவினைப்புண்ணியபாவமுமே. ௧௩

சீயுங்குருதிச்செழுநீர்வழும்புஞ்செறிந்தெழுந்து
பாயுமுடலையொன்றில்லாதப்பாண்டபகலிரவா
யீயுமெறும்புமபுகுகின்றயோனிக்கிருமிபுகன்
மாயுமனிதரைமாயாமலவைக்கயருந்தில்லையே ௧௪

சீதப்பனிக்குண்டுசிக்கெனக்கர்ணைதனையிரந்து
நீதுய்யச்சோறுமனைதோறுமுண்டுநீனைவொழுந்தால்
வீதிக்குணக்லவிலைமாதருனையுந்தமேநின்மி
லேதுக்குநீசலித்தாய்மனமேயென்றுட்புண்படவே. ௧௫

ஆறுண்டுதோப்புண்டணிவீதியம்பலந்தானுமுண்டு
நீறுண்டுகந்தைநெடுங்கோவணமுண்டுநித்தநித்த
மாறுண்டுலாவிமயங்குநெஞ்சேமனைதோறுஞ்சென்று
சோறுண்டுதூங்கிப்பிணஞ்சும்மாவிருக்கச்சுகமுமுண்டே. ௧௬

உடுக்கக்கவிக்கக்குளிர்காற்றுவெயிலுடங்கிவந்தாற்
றடுக்கப்பழையவொருவேட்டியுண்டுசகமுழுதும
படுக்கப்புறந்திண்ணையெங்குமுண்டுபசித்துவந்தாற்
கொடுக்கச்சிவனுண்டுநெஞ்சேநமக்குக்குறையில்லையே. ௧௭

மாடுண்டுகன்றுண்டுமக்களுண்டென்றுமகிழ்வதெல்லாங்
கேடுண்டெனும்படிகேட்டுவிட்டேயினிக்கேண்மனமே

யோடுண்டுகந்தையுண்டுள்ளேயெழுத்தைந்துமோதவுண்டு
தோடுண்டகண்டனடியார்நமக்குத்துணையுமுண்டே. ௧௮

மாத்தானவத்தையுமாயாபுரியின்மயக்கத்தையு
நீத்தார்தமக்கொருநிட்டையுண்டோவித்தனன்புகொண்டு
வேர்த்தார்குளித்துப்பசித்தாற்புசித்துவிழித்துயின்று
பார்த்தாலுலகத்தவர்போலிருப்பர்பற்றற்றவரே. ௧௯

ஒன்றென்றிருதெய்வமுண்டென்றிருவுயர்செல்வமெல்லா
மன்றென்றிருபசித்தோர்முகம்பார்நல்லறமுநட்பு
நன்றென்றிருநடுநீங்காமலேநமக்கிட்டபடி
யென்றென்றிருமனமேயுனக்கேயுபதேசமிதே ௨௰

நாட்டமென்றேயிருசற்குருபாதத்தைநம்புபொம்ம
லாட்டமென்றேயிருபொல்லாவுடலையடர்ந்தசந்தைக்
கூட்டமென்றேயிருசுற்றத்தைவாழ்வைக்குடங்கவிழ்நீ
ரோட்டமென்றேயிருநெஞ்சேயுனக்குபதேசமிதே. ௨௧

என்செயலாவதியாதொன்றுமில்லையினித்தெய்வமே
யுன்செயலேயென்றுணரப்பெற்றேனிந்தவூனெடுத்த
பின்செய்ததீவினையாதொன்றுமில்லைபிறப்பதற்கு
முன்செய்ததீவினையோ விங்ஙனேவந்துமூண்டதுவே. ௨௨

திருவேடமாகித்தெருவிற்பயின்றெனைத்தேடிவந்து
பரிவாகப்பிச்சைபகருமென்றூனைப்பதம்பணிந்தேன்
கருவாகுமேதக்கடற்கரைமேவக்கருதுமென்னை
யுருவாக்கிக்கொள்ளவல்லோவிங்ஙனேசிவனுற்றதுவே. ௨௩

விட்டேனுலகம்விரும்பேனிருவினைவீணருடன்
கிட்டேனவருரைகேட்டிரேன்மெய்கெடாதநிலை
தொட்டேன்சுகதுக்கமற்றுவிட்டேன்றொல்லைநான்மறைக்கு
மெட்டேனெனும்பரமென்னிடத்தேவந்திங்கெய்தியதே. ௨௪

அட்டாங்கயோகமுமாதாரமாறுமவத்தையைந்தும்
விட்டேறிப்போனவெளிதனிலேவியப்பொன்றுகண்டேன்
வட்டாகிச்சம்மதிப்பாலூறலுண்டுமகிழ்ந்திருக்க
வெட்டாதபேரின்பமென்னைவிழுங்கியிருக்கின்றதே. ௨௫

நரியெனக்கென்னும்புழுவோவெனக்கென்னுமிந்தமண்ணுஞ்
சரியெனக்கென்னும்பருந்தோவெனக்கெனுந்தான்புசிக்க
கரியெனக்கென்னும்புனலுமெனக்கென்னுமிக்காறுடலைப்
பிரியமுடனவளர்த்தேனிதனாலென்னபேறெனக்கே. ௨௬

அன்னரன்வீதியடைசிரப்பாகுமணிபடையோர்
நன்றொருநாளொன்[illegible]

றூண்டுணைள்ளிருக்குமண்டபமன்னியானசகமுமெல்லா
மெண்ணரியாகாயமண்டபத்திக்கனமென்னரிதே. ௨௭

என்பெற்றதாயருமென்னைப்பிணமென்றிகழ்ந்துவிட்டார்
பொன்பெற்றமாதரும்போவென்றுசொல்லிப்புலம்பிவிட்டார்
கொன்பெற்றமைந்தரும்பின்வலம்வந்துகுடமுடைத்தா
ருன்பற்றொழியவொருபற்றுமில்லையுடையவனே. ௨௮

கறையற்றபல்லுங்கரித்துணியாடையுங்கள்ளமின்றிப்
பொறையுற்றநெஞ்சமும்பொல்லாதவூணும்புறந்திண்ணையுந்
தறையிற்கிடப்புமிரந்துண்ணுமோடுநெஞ்சகமறியக்
குறைவற்றசெல்வமென்றேகோலமாமறைகூப்பிடுமே. ௨௯

எட்டுத்திசையும்பதினாறுகோணமுமெங்குமொன்றாய்
முட்டித்ததும்பிமுளைத்தோங்குசோதியைமூடரெல்லாங்
கட்டிச்சுருட்டித்தங்கக்கத்தில்வைப்பார்கருத்தில்வையார்
பட்டப்பகலையிரவென்றுகூறிடும்பாதகரே. ௩௰

வாய்நாறுமூழ்முன்மயிர்ச்சிக்குநாறிடுமையிட்டகண்
பீநாறுமங்கம்பிணவெடிநாறும்பெருங்குழிவாய்ச்
சீநாறுயோனியழுநாறுமிந்திரச்சேருசிந்திப
பாய்நாறுமங்கையர்க்கோவிங்ஙனேமனமபற்றியதே. ௩௧

உரைக்கைக்குநல்லதிருவெழுத்தைந்துண்டுரைப்படியே
செருக்கித்தரிக்கத்திருநீறுமுண்டுதெருக்குப்பையிற்
றரிக்கக்கரித்துணியாடையுமுண்டெந்தச்சாதியிலு
மிரக்கத்துணிந்துகொண்டேனகுறைவேதுமெனக்கில்லையே. ௩௨

ஏதப்பட்டாயினிமேற்படும்பாட்டையுந்தெரிந்து
போதப்பட்டாயில்லைநல்லோரிடஞ்சென்றுபுல்லறிவால்
வாதைப்பட்டாய்மடமாதர்கலவிமயக்கத்திலே
பேதைப்பட்டாய்நெஞ்சமேயுனைப்போலில்லைபித்தருமே, ௩௩

சுரப்பற்றுவல்வினைசுற்றமுமற்றுத்தொழில்களற்றுக்
கரப்பற்றுமங்கையர்கையிணக்கற்றுக்கவலையற்று
வரப்பற்றுநாதனைவாயாரவாழ்த்திமனமடங்கப்
பரப்பற்றிருப்பதன்றோபரமாபரமானந்தமே ௩௪

பேய்போற்றிரிந்துபிணம்போற்கிடந்திட்டபிச்சையெல்லா
நாய்போலருந்திச்சிரிபோலுழன்றுநன்மங்கையரைத்
தாய்போற்கருதித்தமர்போலனைவர்க்குந்தாழ்மைசொல்லிச்
சேய்போலிருப்பர்கண்டீருண்மைஞானந்தெளிந்தவரே. ௩௫

விடக்கேபருந்தின்விருந்தேகமண்டலவினைவிட்ட
முடக்கேபுழுவந்துறையிடமேநலமுற்றுமிலாச்
சடக்கேகருவிதளர்ந்துவிட்டாற்பெற்றதாயுந்தொடாத்
தொடக்கேயுனைச்சுமந்தேனினியேதுசுகமெனக்கே. ௩௬

அழுதாற்பயனென்னநொந்தாற்பயனென்னவாவதில்லை
தொழுதாற்பயனென்னநின்னையொருவர்சுடவுரைத்த
பழுதாற்பயனென்னநன்மையுந்தீமையும்பங்கயத்தோ
னெழுதாப்படிவருமோசலியாதிரென்னேழைநெஞ்சே. ௩௭

செல்வரைப்பின்சென்றுபசாரம்பேசித்தினந்தினமும்
பல்லினைக்காட்டிப்பரிதவியாமற்பரானந்தத்தி
னெல்லையிற்புக்குநல்லேகாந்தமாயெனக்காமிடத்தே
யல்லலற்றென்றிருப்பேனாலநீழலரும்பொருளே. ௩௮

ஊரீருமக்கோருபதேசங்கேளுமுடம்படங்கப்
போரீர்சமனைக்கழுவேற்றுநீற்றைப்புறந்திண்ணையிற்
சாரீரனந்தலைச்சுற்றத்தைநீங்கிச்சகநகைக்க
வேரீருமக்கவர்தாமேதருவரிணையடியே. ௩௯

நீற்றைப்புனைந்தென்னநீராடப்போயென்னநீமனமே
மாற்றிப்பிறக்கவகையறிந்தாயில்லைமாமறைநூ
லேற்றிக்கிடக்குமெழுகோடிமந்திரமென்னகண்டா
யாற்றிற்கிடந்துந்துறையறியாமலலைகின்றையே. ௪௰

ஓங்காரமாய்நின்றவத்துவிலேயொருவித்துவந்து
பாங்காய்முளைத்தபயனறிந்தாற்பதினாலுலகு
நீங்காமனீங்கிநிரையாநிறைந்துநிறையுருவா
யாங்காரமானவர்க்கெட்டாக்கனிவந்தமர்ந்திடுமே. ௪௧

விதியார்படைப்புமறியாரளிப்பும்வியன்கயிலைப்
பதியார்தொடைப்புநம்பாலணுகாதுபரானந்தமே
கதியாகக்கொண்டுமற்றெல்லாந்துயிலிற்கனவெனநீ
மதியாதிருமனமேவிதுகாணன்மருந்துனக்கே. ௪௨

நாய்க்குண்டுதெண்டுநமக்குண்டுபிச்சைநமனைவெல்ல
வாய்க்குண்டுமந்திரபஞ்சாட்சரமதியாமல்வரும்
பேய்க்குண்டுநீறுதிகைப்புண்டுவினைபிறவிப்பிணி
நோய்க்குண்டுதேசிகனாரருணோக்கங்கணோக்குதற்கே. ௪௩

நேமங்கணிட்டைகள்வேதங்களாகமநீதிநெறி
யோமங்கடர்ப்பணஞ்சந்திசெபமந்த்ரயோகநிலை
நாமங்கள்சந்தனம்வெண்ணீறுபூசிநலமுடனே
சாமங்கடோறுமிவர்செய்யும்பூசைகள்சற்பனையே. ௪௪

நானெத்தனைபுத்திசொன்னாலுங்கேட்டிலைநன்னெஞ்சமே
யேனிப்படிக்கெட்டுழலுகின்றாயினியேதுமிலா
வானத்தின்மீனுக்குவன்றூண்டிலிட்டவகையதுபோற்
போனத்தைமீளநினைக்கின்றனையென்னபுத்தியிதே. ௪௫

அஞ்சக்கரமெனுங்கோடாலிகொண்டிந்தவைம்புலனும்
வஞ்சப்புலக்கட்டைவேரறவெட்டிவளங்கள்செய்து
விஞ்சத்திருத்திச்சதாசிவமென்கின்றவித்தையிட்டுப்
புஞ்சைசக்களைபறித்தேன்வளர்த்தேன்சிவபோகத்தையே. ௪௬

தாயாருஞ்சுற்றமும்பெண்டிருங்கைவிட்டுத்தாழ்ந்திடுநா
ளீயாருநாளுமெனப்பகர்வாரந்தநேரத்திலே
நோயாரும்வந்துகுடிகொள்வரேகொண்டநோயுமொரு
பாயாருநீயுமல்லார்பின்னையேதுநட்பாமுடலே. ௪௭

ஆயும்பொழுதுமயிர்க்கால்கடோறுமருங்கிருமி
தோயுமலக்குட்டையாகியகாயத்தைச்சுட்டுவிட்டாற்
பேயுநடனமிடுங்கடமாமென்றுபேசுவதை
நீயுமறிந்திலையோபொருட்டாநினைந்தனையே. ௪௮

பூணும்படிக்கல்லபொன்னுக்குத்தானல்லபூமிதனை
காணும்படிக்கல்லமய்கயற்கல்லநற்காட்சிக்கல்ல
சேணுங்கடந்தசிவனடிக்கல்லவெனசிந்தகெட்டுச்
சாணும்வளர்க்கவடியேன்படுந்துயர்சற்றல்லவே. ௪௯

வெட்டாதசக்கரம்பேசாதமந்திரம்வேறொருவர்க்
கெட்டாதபுட்பமிறையாததீர்த்தமினிமுடிந்து
கட்டாதலிங்கங்கருதாதநெஞ்சங்கருத்தினுள்ளே
முட்டாதபூசையன்றோகுருநாதன்மொழிந்ததுவே ௫௰

ஒருமுட்டைபுட்கினுதிர்ந்திடுஞ்செல்லுக்கெவராழுவார்
கருமுட்டைபுக்குக்கழலகன்றாய்கனதுக்கமதாய்
பெருமுட்டுப்பட்டவர்போலழுபேதையிர்பேத்துகிறீ
ரொருமுட்டும்விட்டுமோனமுமென்றைகருமோதுமினே. ௫௧

மையாடுகண்ணியுமைந்தரும்வாழ்வுமனையுஞ்செந்தீ
யையாநின்மாயையுருவெளித்தோற்றமகிலத்துள்ளே
மெய்யாயிருக்குதுநாட்செலநாட்செலவெட்டவெறும்
பொய்யாய்ப்பழங்கதையாய்க்கனவாய்மெல்லப்போனதுவே. ௫௨

ஆயாப்பலகலையாய்ந்திடுந்தூயவருந்தவர்பாற்
போயாகிலுமுண்மையைத்தெரிந்தாயிலைபூதலத்தில்
வேயார்ந்ததோளியர்காயவிகாரத்தில்வீழ்ந்தழுந்திப்
பேயாய்விழிக்கின்றனைமனமேயென்னபித்துனக்கே. ௫௩

அடியாருறவுமான்பூசைநேசமுமன்புமன்றிப்
படியீதில்வேறுபயனுளதோபங்கயன்வகுத்த

குடியானசுற்றமுந்தாரமும்வாழ்வுங்குயக்கலங்கள்
தடியாலடியுண்டவாறொக்குமென்றினஞ்சார்ந்திலரே. ருச

ஆங்காரப்பொக்கசங்கோடக்களஞ்சியமாணவந்தா
னீங்காவரண்மனைபொய்வைத்தகூடம்விண்ணீடிவளா
தேங்கார்பெருமதிற்காமவிலாசமித்தேகங்கந்தல்
பாங்காயுனைப்பணிந்தெப்படிஞானம்பலிப்பதுவே ருரு

ஒழியாப்பிறவியெடுத்தேங்கியேங்கியுழன்றநெஞ்சே
யழியாப்பதவிக்கவுடதங்கேட்டியறுதியனை
மழுமான்கரத்தனைமால்விடையானைமனத்திலுன்னி
விழியாற்புனல்சிந்திவிம்மியழுநன்மைவேண்டுமென்றே. ருசு

நாய்க்கொருசூலுமதற்கோர்மருத்துவநாட்டிலுண்டோ
பேய்க்கொருஞானம்பிடிபடுமோபெருங்காஞ்சிரங்கா
யாக்குவராரதருந்துவராரதுபோலுடம்பு
தீக்கிரையாவதல்லாலேதுக்காமிதைச்செப்புமினே ருஎ

கச்சிற்கிடக்குங்கனதனத்திற்கடைக்கண்கள்பட்டே
யிச்சித்திருக்கின்றவேழைநெஞ்சேயிமவான்பயந்த
பச்சைப்பசுங்கொடியுண்ணாமுலைபங்கர்பாதத்திலே
தைச்சுக்கிடம்மனமேயொருகாலுந்தவறில்லையே ருஅ

மாணார்விழியைக்கடந்தேறிவந்தனன்வாழ்குருவுங்
கோணாகியென்னைக்குடியேற்றிக்கொண்டனன்குற்றமில்லை
போனாலும்பேரிருந்தாலுநற்பேரிதுபொய்யன்றுகா
ணானாலுமிந்தவுடம்போடிருப்பதருவருப்பே ருகூ

சற்றாகிலுந்தன்னைத்தானறியாய்தனையாய்ந்தவரை
யுற்றாகிலுமுரைக்கப்பொருந்தாயுனக்கானநிலை
பற்றாய்குருவைப்பணியாய்பரத்தையர்பாலிறசெனமென்
பெற்றாய்மடநெஞ்சமேயுனைப்போலில்லைபித்தனுமே. சுய

உளியிட்டகல்லையுமொப்பிட்டசாந்தையுமுத்தையறப்
புளியிட்டசெம்பையும்போற்றுகிலேனுயர்பொன்னெனவே
யொளியிட்டதாளிரண்டுள்ளேயிருத்துவதுண்மையென்று
வெளியிட்டடைத்துவைத்தேனினிமேலொன்றும்வேண்டிலனே. ()

திருச்சிற்றம்பலம்.

## தாயாருக்குத் தகனகிரியை

### செய்கையிற்பாடிய

### வெண்பா.

ஐயிரண்டுதிங்களா வங்கமெலாநொந்துபெற்றுப்
பையலென்றபோதே பரிந்தெடுத்துச - செய்யவிரு
கைப்புறத்திலேந்திக் கனகமுலைதந்தாளை
யெப்பிறப்பிற்காண்பே னினி. ௧

முந்தித்தவங்கிடந்து முந்நூறுநாட்சுமந்தே
யந்திபகலாச்சிவனை யாதரித்துத் - தொந்தி
சரியச்சுமந்துபெற்ற தாயார்தமக்கோ
வெரியத்தழல் மூட்டுவேனா ௨

வட்டிலிலுந்தொட்டிலிலு மார்மேலுந்தோண்மேலும்
கட்டிலிலும்வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக்காப்பாற்றிச் சீராட்டுந்தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன். ௩

நொந்துசுமந்துபெற்று நோவாமலேந்திமுலை
தந்துவளர்த்தெடுத்துத் தாழாமே - யந்திபகல்
கையிலேகொண்டென்னைக் காப்பாற்றுந்தாய்தனக்கோ
மெய்யிலேதீமூட்டு வேன். ௪

அரிசியோநானிடுவே னாத்தாடனக்கு
வரிசையிட்டுப்பார்த்து மகிழாம - லுருசியுள்ள
தேனேயமிர்தமே செல்வத்திரவியப்பூ
மானேயெனவழைத்த வாய்க்கு. ௫

அள்ளியிடுவதரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனைவைப்பேனோ கூசாமன் - மெள்ள
முகமேன்முகம்வைத்து முத்தாடியென்றன்
மகனேயெனவழைத்த வாய்க்கு ௬

### விருத்தம்.

முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையி
லன்னையிட்டதீ யடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூள்கமூள்கவே. ௭

### வெண்பா.

வேகுதேதீயதனில் வெந்துபொடிசாம்ப
லாகுதேபாவியே னையகோ - மாகக்

குருவிபறவாமற் கோதாட்டியென்னைக்
கருதிவளர்த்தெடுத்த கை ௮

வெந்தாளோசோலையிரி வித்தகாநின்பதத்தில்
வந்தாளோவென்னை மறந்தாளோ-சந்ததமும்
முனையேநோக்கி யுயந்துயரங்கிடந்தென்
றன்னையேயீன்றெடுத்த தாய் ௯

வீற்றிருந்தாளன்னை வீதிதனிலிருந்தாள்
நேற்றிருந்தாளின்றுவெந்து நீறானாள் - பாற்றெளிக்க
வெல்லீரும்வாருங்க ளேதென்றிரங்காம
லெல்லாஞ்சிவமயமே யாம் ௰

இடைமருது.

மென்றுவிழுங்கி விடாயசழிக்கநீரதேட
லென்றுவிடியுமெனக் கெங்கோவே - நன்றி
கருகார்புகழூன்றுங் கட்டழலாற்செற்ற
மருதாவுன்சந்நிதிக்கே வந்து ௧

ஒற்றி.

கண்டங்கரியதாங் கண்மூன்றுடையதா
மண்டத்தைப்போல வழகியதாந் - தொண்ட
ருடலுருகத்தித்திக்கு மோங்குபுகழொற்றிக்
கடலருகேநிற்குங் கரும்பு ௨

ஓடுவிழுந்துசிப்பாயு மொன்பதுவாய்ப்புண்ணுக்
கிடுமருந்தையானறிந்து கொண்டேன் - கடுவருந்துந்
தேவாதிதேவன் றிருவொற்றியூர்த்தெருவிற்
போவாரடியிற் பொடி ௩

வாவியெல்லாந்தீர்த்த மணலெல்லாம்வெண்ணீறு
காவனங்களெல்லாங் கணநாதர் - பூவுலகில்
வீதுசிவலோக மெனறென்றேமெய்த்தவத்தோ
ரோதுந்திருவொற்றி யூர் ௪

திருவாரூர்

ஆரூரரிங்கிருக்க வவ்வூர்த்திருநாளென்
றூரூர்கடோறு முழலுவீர்-நேரே
யுளகுறிப்பைநாடாத வூமர்காணீவிர்
விளக்கிருக்கத் தீத்தேடுவீர். ௧

எருவாய்க்கிருவிரன்மே லேருபுழுக்கூட்டுக்
கருவாய்க்கோகண்கலக்கப் பட்டாய்-திருவாரூர்த்
தேரோடும்வீதியிலே செத்துக்கிடந்தாயே
நீரோடுந்தாரைக்கே நீ ௨

### திருக்காஞ்சி.

எத்தனையூரெத்தனைவீ டெத்தனைதாய்பெற்றவர்க
ளெத்தனைபேரிட்டழைக்க வேனென்றே-னித்த
மெனக்குக்களையாற்றா யேகம்பாகம்பா
வுனக்குத்திருவிளை யாட்டோ ௭

### கச்சிககாரோணம்

அத்திமுதலெறும்பீ றானவுயிரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந்தளிக்குந் தேசிகா-மெத்தப்
பசிக்குதையாபாவியேன் பாழ்வயிற்றைப்பற்றி
யிசிக்குதையாகாரோ ணரே ௮

### திருக்காளத்தி

பொய்யையொழியாய் புலாலைவிடாய்காளத்தி
யையரையெண்ணா யறஞ்செய்யாய் வெய்ய
சினமேயொழியாய் திருவெழுத்தைந்தோதாய்
மனமேயுனக்கென்ன மாண்பு ௯

### திருவிருப்பையூர்

மாதாவுடல்சலித்தாள வல்வினையேன்கால்சலித்தேன்
வேதாவுங்கைசலித்து விட்டானே-நாதா
விருப்பையூர்வாழ்சிவனே யின்னமோரன்னை
கருப்பையூர்வாராமற் கா ௰

### திருவையாறு

மண்ணுந்தணலாற வானும்புகையாற
வெண்ணெரியதாயு மிளைப்பாறப் பண்ணுமயன்
கையாரவுமடியேன காலாறவுங்கண்பா
ரையாதிருவை யாறா ௧௧

### குற்றாலம்

காலன்வருமுன்னே கண்பஞ்சடைமுன்னே
பாலுண்கடைவாய் படுமுன்னே - மேல்விழுந்தே
யுற்றாரழுமுன்னே யூரார்சுடுமுன்னே
குற்றாலத்தானையே கூறு ௧௨

### பொது.

சிற்றம்பலமுஞ் சிவனுமருகிருக்க
வெற்றம்பலந்தேடி விட்டோமே-நித்தம்
பிறந்திடத்தைத்தேடுதே பேதைமடநெஞ்சங்
கறந்திடத்தைநாடுதே கண் ௧

தோடவிழும்பூங்கோதைத் தோகையுனைப்போது
தேடினவர்போய்விட்டார் தேறியிரு-நாடிநீ
யென்னைநினைத்தா லிப்பிறப்பைப்பேணு
னுன்னைநினைத்தா லுதை ௨

வாசற்படிகடந்து வாராதபிச்சைக்கிங்
காசைப்படுவதில்லை யண்ணலே - யாசைதனைப்
பட்டிறந்தகாலமெல்லாம் போதும்பரமேட்டி
சுட்டிறந்தஞானத்தைச் சொல் ௩

நச்சரவம்பூண்டானை நன்றாத்தொழுவதுவு
மிச்சையிலேதானங் கிருப்பதுவும் - பிச்சைதனை
வாங்குவதுமுண்பதுவும் வந்துதிருவாயிலிலே
தூங்குவதுந்தானே சுகம் ௪

இருக்குமிடந்தேடி யென்பசிக்கேயன்ன
முருக்கமுடன்கொண்டுவந்தா லுண்பேன் - பெருக்க
வழைத்தாலும்போகே னரனேயென்றேக
மிளைத்தாலும்போகே னினி ௫

விட்டுவிடப்போகுதுயிர் விட்டவுடனேயுடலைச்
சுட்டுவிடப்போகிறார் சுற்றத்தார் - பட்டதுபட்
டெந்நேரமுஞ்சிவனை யேத்துங்கள்போற்றுங்கள்
சொன்னேனதுவே சுகம் ௬

ஆவியொடுகாய மழிந்தாலுமேதினியிற்
பாவியென்றுநாமம் படையாதே - மேவியசீர்
வித்தாரமுங்கடம்பும் வேண்டாமடநெஞ்சே
செத்தாரைப்போலே திரி ௭

வெட்டவெளியான வெளிக்குந்தெரியாது
கட்டளையுங்கைப்பணமுங் காணாதே - இட்டமுடன்
பற்றென்றும்பற்றாது பாவியேநெஞ்சிலவன்
இற்றெனவேவைத்த இனிப்பு ௮

இப்பிறப்பைநம்பி யிருப்பரோநெஞ்சகமே
வைப்பிருக்கவாயின் மனையிருக்கச் - சொப்பனம்போல்
விக்கிப்பற்கிட்டக்கண் மெத்தப்பஞ்சிட்டப்பைக்
கக்கிச்செத்துக்கொட்டக் கண்டு ௯

மேலுமிருக்க விரும்பினையேவெள்ளிடையோன்
சீலமறிந்திலையே சிந்தையே - காலைக்குக்
கொட்டையிட்டுமெத்தையிட்டுக் குத்திமொத்தப்பட்டவுடல்
கட்டையிட்டுச்சுட்டுவிடக் கண்டு ௰

ஒன்பதுவாய்த்தோற்பைக் கொருநாளைப்போலவே
யன்புவைத்துநெஞ்சே யலைந்தாயே - வன்சமுக்க
டத்தித்தத்திச்சட்டைக் கட்டிக்கட்டிப்புட்டுக்
கத்திக்குத்தித்தின்னக் கண்டு ௧௧

இன்னம்பிறக்க விசைவையோநெஞ்சமே
மன்னறிவொன்றிருந்து வாழ்க்தலைமாமுன்னை

மெரிந்தகட்டைமீதி லிணைக்கோவணத்தை
யுரிந்திருட்டிப்போட்டது கண்டு ௧௨

முதற்சங்கமூதூட்டு மொய்குழலார்தம்மை
நடுச்சங்கநல்விலங்கு பூட்டும் - கடைச்சங்க
மாம்போதனவூது மம்மட்டோவிம்மட்டோ
நாம்பூமிவாழ்ந்த நலம் ௧௩

எத்தனைநாள்கூடி யெடுத்தசரீரமிவை
யத்தனையுமண்டின்ப கல்லவோ - வித்தகனார்
காலைப்பிடித்துமெள்ளக் கங்குல்பகலற்றிடத்தே
மேலைக்குடியிருப் போமே. ௧௪

எச்சிலென்றுசொல்லி யிதமகிதம்பேசாதே
யெச்சிலிருக்கு மிடமறியீர் - ரசசிறனை
யுய்த்திருந்துபார்த்தா லொருமைவெளிப்படும்பின்
சித்தநிருமய மாமே ௧௫

எத்தனைபேர்நட்டகுழி யெத்தனைபேர்தொட்டமுலை
யெத்தனைபோபற்றி யிழுக்கவிதழ் - நித்தநித்தம்
பொய்யடாபேசும் புவியின்மடமாதரைவிட்
டுய்யடாவுய்யடாவுய் ௧௬

இருப்பதுபொய்போவதுமெ யெனறெண்ணிநெஞ்சே
யொருத்தருக்குந்தீங்கினை நீ யுன்னாதே - பருத்ததொந்தி
நம்மதென்றுநாமிருப்ப நாய்நரிகள்பேய்கழுகு
தம்மதென்றுதாமிருக்குந் தான் ௧௭

எத்தொழிலைச்செய்தாலு மேதவத்தைப்பட்டாலு
முத்தர்மனமிருக்கு மோனத்தே - வித்தகமாய்
காதிவிளையாடியிரு கைவீசிவந்தாலும்
தாதிமனநீர்க்குடத்தே தான் ௧௮

மாலைப்பொழுதின்று மஞ்சளரைத்தேகுளித்து
வேலைமினுக்கிட்டு விழித்திருந்து - சூலாகிப்
பெற்றாள்வளர்த்தாள் பெயரிட்டாள்பெற்றபிள்ளை
பித்தானாலென்செய்வாள் பின் ௧௯

விருத்தம்

நாப்பிளக்கப்பொய்யுரைத்து நவநிதியந்தேடி
நலனொன்றுமறியாத நாரியரைக்கூடிப்
பூப்பிளக்கப்பொய்யுரைத்து புற்றீசல்போலப்
புலபுலெனக்கலகலெனப் புதல்வர்களைப்பெறுவீர்
காப்பதற்கும்வகையறியீர் கைவிடவுமாட்டீர்
கவர்பிளந்தமரத்துளையிற் காலைநுழைந்துகொண்டீர்
ஆப்பதனையசைத்துவிட்ட குரங்கதனைப்போல
அகப்பட்டீர்கிடந்துழல வகப்பட்டீரே ௨௰

இதுவுமது-வேறு.

வடிவந்தானும்வாலிபம் மகனுந்தாயுமாமியும்
படிகொண்டாருமுரிமேல பழிகொண்டாட்டீதியோ
குடிவந்தானு மறைமேய குயவன்றானுங்கூழையோ
நடுநின்றானும் வினைதானே நகரஞ்சூறையானதே. ௨௧

இதுவுமது-வேறு.

மண்ணுமுருகுமாமுருகு மாயையுருகுமாலுருகும்
பெண்ணுமுருகுமாணுருகும் பேதாபேதிவகையுருகும்
அண்ணலுருகுமிடத்தமர்ந்த வாத்தாளுருகுமரவணையான்
எண்ணியுருகுங்குருநாத னென்பாலுறைந்தவோர்மொழியே. ௨௨

திருச்சிற்றம்பலம்.

# முதல்வன்முறையீடு.

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

மூலமறியேன்முடியுமுடியறியேன்
ஞாலத்துட்பட்டதுயர்நாடடக்குதடா
அறியாமையாலத்தாலறிவுமுதற்கெட்டேனடா
பிரியாவினைப்பயனாற்பிறந்துப்பிடித்தேனடா
தனுவாதியநான்குந்தானாய்மயங்கினேனடா
மனுவாதிசத்திவலைவிலகப்பட்டேனடா
மாமாயையென்னும் வனத்திலலைகிறண்டா
தாமாயுலகனைத்துந்தாதுகலங்கிறண்டா ௧

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

மண்ணாசைப்பட்டேனை மண்ணுண்டுபோச்சுதடா
பொன்னாசைபெண்ணாசை போகேனேயென்குதே
மக்கள்சுற்றத்தாசை மறகேனேயெனகுதே
திக்கரசாமாயையது தீரேனேயென்குதே
வித்தைகற்குமாசையது விட்டொழியேனென்குதே
சித்துகற்சமாசை சிதையேனேயென்குதே
மந்திரத்திலாசை மறக்கேனேயென்குதே
சுந்தரத்திலாசை துறக்கேனேயென்குதே
கட்டுவர்க்கத்தாசை கழலேனேயென்குதே
செட்டுதனிலாசை சிதையேனேயென்குதே
மாற்றுஞ்சலவை மறகேனேயென்குதே
சோற்றுகுழியுமினனுந் தூரேனேயென்குதே. ௨

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

ஐந்துபுலனு மடங்கேனேயென்குதே
சிந்தைதவிக்கிறதுந் தேறேனேயென்குதே

காமக் குரோதங் கடக்கேனே யென்குதே
நாமேயா சென்று நாடோறு மெண்ணுதே
அச்சமாங் கார மடங்கேனே யென்குதே
கைச்சுமின் னுமானங் கழலேனே யென்குதே
நீர்க்குமிழி யாமுடலை நித்தியமா யெண்ணுதே
ஆர்க்குமுயா ராசை யழியேனே யென்குதே
கண்ணுக்குக் கண்ணெதிரே கட்டையில் வேகக்கண்டும்
எண்ணுந் திரமா யிருப்போ மென்றெண்ணுதே
அநித்தியத்தை நித்தியமென் றாசரவா யெண்ணுதே
தனித்திருக் கேனென்றே தளாமறக் கேனென்குதே
நரகக் குழியினினு காப்புசி பேனென்குதே
உரகப் படத்தல்கு லுனைக்கெடுப் பேனென்குதே
குருமலை மலையுங் கூடிக்கெடுப் பேனென்குதே
அருமபு விழியுமெந்த னாவியுண் பேனென்குதே
மாதருந் தங்கொண்டு மறலிவருஞ் சமெண்ணுதே
ஆதாரமுமற்றிங் கரக்காயுருகினண்டா
கைதனை யிறைஞ்சுங் கன்னிவனநாதா
வாதவிதந்தனை யிறைப்பட்டருவண்டா. உ௰

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

புல்லாகிப் பூடாய்ப் புலர்ந்தநாள் போதாதோ
கல்லாய் மரமாய்க் கழிந்தநாள் போதாதோ
கிரியாச கீடமாய்க் கெட்டநாள் போதாதோ
நீரியா பூரவமாய் நின்றநாள் போதாதோ
பூதம்பேய் தேவருமாய்ப் போனநாள் போதாதோ
வேதனைசெய் தானவராய் வீந்தநாள் போதாதோ
அன்னைவயிற்றி லழிந்தநாள் போதாதோ
மன்னவருய் வாழ்ந்து மரித்தநாள் போதாதோ
தாயாகித் தாரமாய்த் தாழ்ந்தநாள் போதாதோ
சேயாய்ப் புருடனுமாய்ச் சென்றநாள் போதாதோ
நோயுண்ணவே மெலிந்து நொந்தநாள் போதாதோ
பேயுண்ணப் பேயாய்ப் பிறந்தநாள் போதாதோ
ஊனொடுடல் கூனாகுருடா யுற்றநாள் போதாதோ
ஈனப் பொசிப்பி லிளைத்தநாள் போதாதோ
பட்டனவும் பாதகப்பும் போதாதோ
செட்டநாள் கெட்டே னென்று கேளாதும் போதாதோ
இல்லாமைக் கேயழுது இளைத்தநாள் போதாதோ
எல்லாருமென் பார மெடுத்தநாள் போதாதோ
காமன் கணையாற் கடைப்பட்டல் போதாதோ
ஏமன்காத்தா ளிடியுண்டல் போதாதோ
கானமுகளைப் பட்டோலை நறுக்குண்டல் போதாதோ
தேன்றுளபத்தானேயி தேகுணடம் போதாதோ

உருத்திரனார்சங்காரத் தொழிற்காள்போதாதோ
வருத்தமறிந்தையிலே வாவென்றழைத்தையிலே. ௧௨

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

பிறப்பைத்தவிர்த்தையிலே புன்னாகக்கொண்டையிலே
இறப்பைத்தவிர்த்தையிலே யேனென்றுகேட்டையிலே
பாசமெரித்தையிலே பரதவிப்பைத்தீர்த்தையிலே
பூரியர்தம்முறைப் புனையொன்றளித்தையிலே
அடிமையென்றுசொன்னையிலே யக்குமணிதந்தையிலே
விபூதிலகமேபாகவியுன்றன் வேடமளித்தையிலே
உன்னிலணைத்தையிலே யொன்றாக்கிக்கொண்டையிலே
நின்னடியார்கூட்டத்தி னீயழைத்துவைத்தையிலே
ஐங்குபரத்த னொளித்தவடியார்க்கடியான்
எங்கோவடியா னெமக்கென்றழைத்தையிலே
நாமந்தரித்தையிலே நாளொழியவினையிலே
சேயவருளிலென்னைச் சிந்தித்தழைத்தையிலே
முத்தியளித்தையிலே மோனங்கொடுத்தையிலே
சித்தியளித்தையிலே சீராட்டிக்கொண்டையிலே
தவிர்ப்பைத்தவிர்த்தையிலே தானாக்கிக்கொண்டையிலே
அவிப்பரியதீயாமென ஞானைத்தவிர்த்தையிலே
நின்றநிலையி னிருத்தியென்னைவைத்தையிலே
தானுங்காரணமொழி தொக்கழியப்பார்த்தையிலே
கட்டவுலகக்காட்சிக கட்டொழியப்பார்த்தையிலே
நிட்டையிலேநில்லென்று நீநிறுத்திக்கொண்டையிலே. ௪௨

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

கடைக்கணருள்தாடா கன்னிவனநாதா
கெடுக்குமலமொருக்கிக் கிட்டிவரப்பாரேடா
காதல்தணியேனே கணமுமகிழேனே
சாதல்தவிரேனே சங்கடந்தானதீரேனே
உன்னைத்துதியேனே ஊர்நாடிவாரேனே
பொன்னடியைப்பாரேனே பூரித்துநில்லேனே
ஓங்காரப்பொற்சிலம்பி னுல்லாசம்பாரேனே
பாங்கானதண்டை பலபணியும் பாரேனே
வீரகண்டாமணியின் வெற்றிதனைப்பாரேனே
சூரர்கண்டுபோற்றுமந்த சுந்தரத்தைப்பாரேனே
இடையிற்புலித்தோ லிருந்தகலைப்பாரேனே
விடையிலெழுந்தருளும் வெற்றிதனைப்பாரேனே
ஆனையுரிபோர்த்த வழகுதனைப்பாரேனே
மானைப்பிடித்தேந்து மலர்க்கரத்தைப்பாரேனே

மாண்டார்தலைபூண்ட மார்பழகைப்பாரேனோ
ஆண்டார்நமக்கென் றறைந்துதிரியேனோ
கண்டங்கறுத்துநின்ற காரணத்தைப்பாரேனோ
தொண்டர்கருவினின்ற தோற்றமதைப்பாரேனோ
அருள்பழுத்தமாமதியா மாண்டதத்தைப்பாரேனோ
திருநயனக்கடையொளிருஞ் செழுங்கொழுமைப்பாரேனோ
செங்குமிழின்றண்டம்வளா சிங்காரம் பாரேனோ
அங்கனியைவென்ற வதரத்தைப்பாரேனோ
முல்லைநிலவெறிக்கு மூரலொளிபாரேனோ
அல்லார்புருவத் தழகுதனைப்பாரேனோ
மகரங்கிடந்தொளிரும் வனமைதனைப்பாரேனோ
சிகரமுடியழகுஞ் செஞ்சடையும்பாரேனோ
கங்கையொடுதிங்கணிந்த காட்சிதனைப்பாரேனோ
பொங்கரவைத்தானசடையில் பூணவிதம்பாரேனோ
சரக்கொன்றைபூத்த சடைக்காட்டைப்பாரேனோ
எருக்கறுகூமத்தையணி யேகாந்தம்பாரேனோ
கொக்கிறகுசூடிநின்ற கொண்டாட்டம்பாரேனோ
அக்கினியையேந்திநின்ற வானந்தம்பாரேனோ
தூக்கியகாலுந் துடியிடையும்பாரேனோ
தாக்குமுயலகன்மேற் றூண்டவதைபபாரேனோ
வீசுகரமும் விகசிதமும்பாரேனோ
ஆசையளிக்கு மபயகரம்பாரேனோ
அரிபிரமர்போற்ற வமர்சயசயெனப்
பெரியமமைபாகமவளர் பேரழகைப்பாரேனோ
சுந்தரமீற்றின் சொகுசுதனைப்பாரேனோ
சந்திரசேகரனைத் தயவுசெய்தல்பாரேனோ. ௨௨

கன்னிவனநாதாகன்னிவனநாதா.

கெட்டநாள்கெட்டாலுங் கிருபையிலிப்பாரேடா
பட்டநாள்பட்டாலும பதமெனக்குக்கிட்டாதோ
நற்பருவமாக்குமந்த நாளெனக்குக்கிட்டாதோ
எப்பருவமுங்கழன்ற வேகாந்தங்கிட்டாதோ
வாக்கிறந்துநின்ற மவுனமதிகிட்டாதோ
தாக்கிறந்துநிற்குமந்தத் தற்சுட்டிகிட்டாதோ
வெந்துயரைதீர்க்குமந்த வெட்டவெளிகிட்டாதோ
சிந்தையைததீர்க்குமந்தத தேறலதுகிட்டாதோ
ஆனவடியார்க் கடிமைகொளக்கிட்டாதோ
ஊனமறவென்னை யுணர்த்துவித்தல்கிட்டாதோ
என்னென்றுசொல்லுவண்டா வென்குருவேகேளு
பின்னையெனக்குநீ யல்லாற்பிறிதிலையே. ௨௩

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

அன்னவிகாரமது வற்றவிடங்கிட்டாதோ
சொன்னவிகாரந் தொலைத்தவிடங்கிட்டாதோ

உலகவிகார மொழிந்தவிடங்கிட்டாதோ
மலகருமூவினையினறா வசியாதுறங்கிட்டாதோ

ஒப்புவமைபற்றோ டொழிந்தவிடங்கிட்டாதோ
செப்புதற்குமெட்டாத தெளிந்தவிடங்கிட்டாதோ

வாக்குமனோதீத வகோசரத்திற்செல்லவெனைத்
தாக்குமருட்குருவே நின்றாளிணைக்கேயானபோற்றி

பட்டணத்தார் முதல்வன்முறையீடு

முற்றிற்று.

---

# அருட்புலம்பல்.

ஐங்கரனைத்தெண்டனிட்டே னருளடையவேண்டுமென்று
தங்காமலவந்தொருவ னற்சொருபங்காட்டியெனைக்

கொள்ளைப்பிறப்பறுக்கக் கொண்டான் குருவடிவம்
கள்ளப்புலனறுக்க காரணமாய்வந்தாண்டி

ஆதாரமோராறு மைம்பத்தோரட்சரமும்
சூதானகோட்டையெல்லாஞ் சுட்டானறிசரலே

மெத்தவிகாரம் விளைக்கும்பலபலவாம்
தத்துவங்களெல்லாந் தலைகெட்டுவந்ததடி

என்னோடுடன்பிறந்தா ரெல்லோரும்பட்டார்கள்
தன்னந்தனியே தரித்திருக்கமாட்டேனடி

எல்லாரும்பட்டகள மொன்றுதொலையுமடி
சொல்லியழுதாற் றுயரமெனக்காறுமடி

மண்முதலாமைம்பூத மாண்டுவிழக்கண்டேனடி
வினைமுதலாமைம்பொறிகள் வெந்துவிழக்கண்டேனடி

நீக்காப்புலனைகளைந்து நீறாகவெந்ததடி
வாக்காதியைவரையு மாண்டுவிழக்கண்டேனடி

மனக்கரணமத்தனையும் வகைவகையேபட்டழிய
இனக்கரணத்தோடே யெரிந்துவிழக்கண்டேனடி.

ஆத்துமதத்துவங்கள் ஆடிக்கொழியவெந்ததடி
போய்த்துமலகையெப்படியோ போதமிழந்தானே

வித்தியாதத்துவங்கள் வெந்துவிழக்கண்டேண்டி
சுத்தவித்தையையதினையுஞ் சுட்டானறுசிரசவே

மூன்றுவகைக்கிளையு முப்பத்தாறுவகையும்
கானறுவிழச்சுட்டுக் கருவேரறுத்தானடி

குருவாகிவந்தானே குலமறுக்கவந்தானே
உருவாகிவந்தானே வுருவழிக்கவந்தானே

கேடுவருமென்றறியேன் கெடுமதிகண்டோற்றுமலே
பாடுவருமென்றறியேன் பதிடாணடிருந்தேனடி

எல்லாருமபட்டகளமினைவிட வென்னறியேனே
பொல்லாங்குதீரக்கும் பொறாயிலியையக்கண்டேண்டி

உட்கோட்டைக்குள்ளிருந்தா ரொக்கமடிந்தார்கள்
அக்கோட்டைக்குள்ளிருந்தா றுதுபோபட்டார்கள்

ஒக்கமடிந்ததடி யூருமவெந்ததடி
சற்கோட்டையெல்லாங் கரிக்கோட்டையாச்சுதடி

கொண்ணூற்றறுவரையுஞ் சுட்டானறுசிரவே
கண்ணேறுபட்டதடி கருவேரறுத்தானடி

ஓங்காரங்கெட்டதடி உள்ளதெல்லாமபோச்சுதடி
ஆங்காரங்கெட்டதடி யடியோடறுத்தானடி

தலையாக் குடிலைமுதல் தட்டுருவவெந்ததடி
இடையமனதிடமை யெல்லாமறுத்தானடி

முன்வினையெல்லா முழுதுமறுத்தானடி
தன்னையறியவே தானொருத்தியானேனடி

என்னையேநானறிய விருவினையுமீடழித்து
தன்னையறியாத தலமெனக்குச்சொன்னானடி

தன்னையறிந்தேனடி தனிக்குமரியானேனடி
தன்னந்தனியே தனியிருக்குமபக்குவமோ

வீட்டிலொருவரில்லை வெட்டவெளியானேனடி
காட்டுக்கெறிந்தநிலா கனவாச்சேகண்டதெல்லாம்

கதையாரோகண்டவர்கள் நாட்டுக்குப்பாட்டலவோ
பதையாரோகண்டவர்கள் பார்த்தாருக்கேச்சலவோ

இதுநிலைமைகண்டாண்டி யெங்குமிருந்தானடி
கன்னியழித்தானடி கற்பைக்குலைத்தானடி

கற்புக்குலைத்தமையுங் கருவேரறுத்தமையும்
பொற்புக்குலைத்தமையும் போதமிழந்தமையும்

என்னவினைவருமோ வின்னமெனக்கென்றறியேன்
சொன்னசொல்லெல்லாம் பலித்ததடி சோர்வறவே
கங்குல்பகலற்றிடத்தே காட்டிக்கொடுத்தாண்டி
பங்கமழித்தாண்டி பார்த்தானைப்பார்த்திருந்தேன்
சாதியிற்கூட்டுவரோ சாத்திரத்துக்குள்ளாமோ
ஓதியுணர்ந்ததெல்லா முள்ளபடியாச்சுதடி
என்னகுற்றஞ்செய்தேனோ எல்லாருங்காணாமல்
அன்னைசுற்றமெல்லா மறியாரோவம்புவியில்
கொன்றாரைத்தின்றேனோ தின்றாரைக்கொன்றேனோ
என்றதெல்லாமெண்ணு மிச்சைமறந்தேனே
சாதியிற்கூட்டுவரோ சமயத்தோரெண்ணுவரோ
பேதித்துவாழ்ந்ததெல்லாம் பேச்சற்றிடலாச்சுதடி
கண்டார்க்குப்பெண்ணலவோ காணார்க்குக்காமமடி
உண்டார்களுண்டதெல்லா மூணல்லாதுண்பார்களோ
கொண்டார்கள்கொண்டதெல்லாங்கொள்ளாதார்கொள்ளுவரோ
விண்டவர்கள்கண்டவரோ கண்டவர்கள்விண்டவரோ
பண்டாயநான்மறைகள் பாடும்பரிசலவோ
தொண்டாயதொண்டருளந் தோற்றியொடுங்குமதோ
ஓதவரிதோ வொருவருணர்வரிதோ
பேதமறவெங்கும்விளங்கும்பெருமையன்காண்
வாக்குமனாதிகடந் [illegible]
நோக்கவரியன்கா ணுண்ணுணர்வினுண்ணியன்காண்
சொல்லுக்கடங்கான்காண் சொல்லிறந்துநின்றவன்காண்
கல்லுளிருந்தகனலொளிபோலாகின்றவன்காண்
சுட்டிமந்தபாமரரிற் சுருதிநக்கச்சொன்னவன்காண்
எட்டியெழுத்தோவெழுதிவைத்தகைப்பிழையோ
சும்மாவிருக்கவைத்தான் சூத்திரத்தைநானறியேன்
அம்மாபொருளிதென வடையவிழுங்கினண்டி
பார்த்தவிடமெல்லாம் பரமாகக்கண்டேண்டி
கோத்தநிலைகுலைத்த கொள்கையறியேணடி
மஞ்சனமாட்டி மலர்பறித்துச்சாத்தாமல்
நெஞ்சுவெறும்பாழானேன் நின்றநிலைகாணேனடி
பாடிப்படித்திருந்தும் பன்மலர்கள்சாத்தாமல்
ஓடித்திரியாம லுருக்கெட்டுவிட்டேனடி
மாணிக்கத்துள்ளொளிபோல் மருவியிருந்தாண்டி
பேணித்தொழுமடியார் பேசாப்பெருமையன்காண்

அன்றுமுதலின்றளவு மறியாப்பருவமதில் *
என்றும்பொதுவா யிருந்தகிராமயன்காண்
சித்தவிகாரத்தாலே சின்மயனைக்காணாமல்
புத்திகலங்கி புகுந்தேன்பொறிவழியே
பத்தியறியாமற் பாரிற்கவிங்கேண்டி
ஒத்தவிடநித்திரையென் றொத்துயிருந்தேண்டி
செத்தாரையொத்தேண்டி சிந்தைதெளிந்தேண்டி
மற்றொருமில்லையடி மறுமாற்றங்காணேண்டி
கல்வியல்லகேள்வியல்ல கைகாட்டுங்காரணங்காண்
எல்லையளவற்றதடி யெங்குநிறைந்ததடி
வாசாமகோசரத்தை மருவியிடங்கொண்டாண்டி
ஆசுசமில்லாண்டி யறிவுக்கறிவாண்டி
பத்துத்திசைக்கு மடங்காப்பருவமடி
எத்திசைக்குமெங்கு மிடைவிடாதேகமடி
இத்திக்கலூறுமடி சித்தமுடையார்க்குப்
பத்திக்கடலுட் பதித்தபரஞ்சோதியடி
உள்ளுணர்வாய்நின்றவர்த முணர்வுக்குடிவாண்டி
என்னளவுமுள்ளத்திலே யேறிக்குறைவாண்டி
தூறுந்தலையுமிலா ரேற்றமொடுக்கமிலான்
ஆருமறியாம லகண்டமாய்நின்றாண்டி
எத்தனையோவண்டத் திருந்தவர்களெத்தனைபேர்
அத்தனைபேருண்டாலும் அணுவுங்குறையாண்டி
வாக்குமனமும் வடிவுமிலாவான்பொருள்காண்
போக்கும்வரவுமிலான் பொருளரியபூரணன்காண்
காட்சிக்கெளியான்காண் கண்டாலுங்காணான்காண்
மாட்சிமனம்வைத்தார்க்கு மாணிக்கத்துள்ளொளிகாண்
வாழ்த்தியவனை வழிபட்டால்மன்னுயிர்கள்
தோற்றவரியார்காண் சொல்லிருந்தசோதியன்காண்
ஐயமறுத்தவனை யாராய்வாருண்டானால்
வையகத்தேவந்து மலர்ப்பாதம்வைத்திடுவாள்
அணுவுக்குமேருவுக்கு மகம்புறமாய்நின்றான்காண்
கணுமுற்றஞானக் கரும்பின்றெளிவான்காண்
எக்காலுமிக்காலு மிப்படியாயப்படியா
சொன்னாலுங்கேளான்காண் சேத்திரத்திற்கொள்ளான்காண
ஆத்தாளுக்காத்தாளா மப்பனுக்கப்பனுமாம்

கோத்தார்க்குக்கோத்தநிலை கொண்டகுணக்கடல்காண்
இப்போபுதிதேடி யெத்தனைநாளுள்ளதடி
அப்போதைக்கப்போ தருளறிவுந்தந்தாண்டி
பற்றற்றார்பற்றாகப் பற்றியிருந்தாண்டி
குற்றமறுத்தாண்டி கூடியிருந்தாண்டி
வெட்டவெளியிலெனை மேவியிருந்தாண்டி
பட்டப்பகலிலடி பார்த்திருந்தாரெல்லோரும்
வாழ்வானவாழ்வெனக்கு வந்ததடிவாழாயல்
தாழாமற்றாழ்ந்தேனடி சற்றுங்குறையாமல்
பொய்யானவாழ்வெனக்குப் போதுமெனக்காணேனடி
மெய்யானவாழ்வெனக்கு வெறும்பாழாய்விட்டதடி
கனவியழித்தவனைக் கண்ணாரக்கண்டேனடி
என்னியல்புநானறியே னீதென்னமாயமடி
சொல்லாலேசொல்லுதற்குச் சொல்லவாயில்லையடி
எல்லாருங்கண்டிருந்து மிப்போதறியார்கள்
கண்மாயமிட்டாண்டி கருத்துமிழந்தேனடி
யுண்மாயமிட்டவனை யுருவழிக்கக்கண்டேனடி
என்னசொல்லப்போறேனா னிந்தவதிசயத்தை
கன்னியிளகமது காய்த்ததடிகண்ணார
ஆர்ந்தவிடமத்தனையு மருளாயிருக்குதடி
சார்ந்தவிடமெல்லாஞ் சவாதுமணக்குதடி
இந்தமணமென்று மியற்கைமணமென்றறிந்து
அந்தச்சுகாதீதக் கருட்கடலின்மூழ்கினண்டி
இரும்பிலுறைநீர்போல வெனைவிழுங்கிக்கொண்டாண்டி
அரும்புநிறைவாசனைபோற் றன்றேயிருந்தாண்டி
அக்கினிகற்பூரத்தை யறவிழுங்கிக்கொண்டாற்போல்
மக்கினம்பட்டுள்ளே மருவியிருந்தாண்டி
கடல்நீருமாறுபோற் கலந்துகரைகாணேனடி
உடலுமுயிரும்போ லுட்கலந்துநின்றாண்டி
பொன்னுமுறைமாற்றும்போற் பொருவரியபூரணன்காண்
மன்னுமனுபூதியடி மாணிக்கத்துள்ளொளிபோல்
கங்குகரையில்லாண்டி கரைகாணக்கப்பலடி
எங்குமளவில்லாண்டி யேகமாய்நின்றாண்டி
தீவகம்போலென்னைச் சேர்த்தபரசின்மயன்காண்
பாவகமொன்றில்லாண்டி பார்த்திடமெல்லாம்பரன்காண்

உள்ளார்க்குள்ளாண்டி யூருமில்லானே பேருமில்லான்
கள்ளப்புலனருக்கக் காரணமாய்வர்தாண்டி
அப்பிறப்புக்கெல்லாம் அருளாயமர்ந்தாண்டி
இப்பிறப்பில்வந்தா னிவனுருமெய்ப்பொருள்காண்
நீரொளிபோலெங்கு நிறைந்தநிராமயன்காண்
பாரொளிபோலெங்கும் பரந்தபராபரன்காண்
நூலாலுணர்வரிய நுண்மையினுண்மயன்காண்
பாலாடிசற்கரைபோற் பரந்தபரிபூரணன்காண்
உளக்கண்ணுக்கல்லா தூனிகண்ணுமேலோருமதோ
விளக்குச்சுடரொளிபோல் மேவியிருந்தாண்டி
கல்லுளிருந்த கனலொளிபோற்காரணமாய்ப்
புல்லிலிருந்தும் பொருவரியபூரணன்காண்
பொற்பூவும்வாசனைபோற் போகபிறந்தாற்குக்
கற்பூவும்வாசனைபோற் காணுக்கயவருக்கு
மைக்குழம்புமுத்தும்போன் மருவிமறவாதவற்குக்
கைக்குட்கனியாகும் கருவறுத்தகாரணற்கு
பளிங்கிற்பவளம் பற்றற்றபாவலர்க்குக்
கிளிஞ்சிலைவெள்ளியென்பார் கிட்டாதார்கிட்டுவரோ
எட்டுக்கடங்காண்டி யெழுத்திற்பிறவாண்டி
காட்டுநெறிகளெல்லாம் கற்பூரவிசெய்தாண்டி
பஞ்சப்பிரளயத்து மிஞ்சியிருப்பாண்டி
நஞ்சுபொதிமிடற்று னயனத்தழல்விழியான்
அகங்காக்கும்புறங்காக்கும் அளவிலாவண்டமுதல்
செகங்காக்குங்காணுத் திசைவத்துங்காக்குமடி
பேசாப்பிரமமடி பேச்சிறந்தபேரொளிகாண
ஆசாபாசங்க ளணுகாதபேரொளிகாண்
தேசமிறந்தவன்காண் திசையிறந்ததென்கடல்காண்
ஊசிமுனையூன்ற வில்லாவுருபொருள்காண்
சிப்பியில்முத்தொளிகாண் சின்மயநோக்கில்லார்க்கு
அப்பிலொளிபோ லமர்ந்தவரும்பொருள்காண்
ஆலாவிருக்ஷமடி யளவிலாச்சாகையடி
மேலாம்பதங்கள் விசும் பூமிருவுமெய்ப்பொருள்காண்
வல்லிஷமெலாங்கடந்து மருவாமலர்ப்புதங்காண்
அங்கிஷமாயெங்கும் ஆய்ந்தவரும்பொருள்காண்

நாமநட்டமானதடி நவிலவிடமில்லையடி
காமனைக்கண்ணாலெரிக்கக் கனல்விழித்தகாரணன்காண்
கொட்டாதசெம்பொனடி குளியாத்தரளமடி
எட்டாதகொம்பிலடி யீப்புக்காத்தேனமுதம்
காணிப்பொன்னாணியுடன கலலுரைமாத்தின்னதென்றே
ஆணியுடன்கூட்டி யடங்கவிட்டுக்கொண்டாண்டி
அளவிறந்தவணடததா ரத்தனைபேருண்டாலும
பிளவளவுந்தானசற்றும பேசாப்பிரமமடி
கண்ணெஞ்சினுள்ளே கழுநீலம்பூத்தாபபோல்
என்னெஞ்சினுள்ளே யிணையடிகளவைத்தாணடி
வேதப்புரவியடி விரைந்தோடியுமமடியார
காதற்றஞானமடி காண்பார்கருத்துடையார்
பாசவினையைப் படப்பார்த்தபார்வையுடன்
நேசத்தைகாட்டியடி நில்லென்றுசொன்னாண்டி
ஓசையொடுங்குமிட மோங்காரத்துள்ளொளிகாண்
பேசாதிருக்கும பிரமமிதுவென்றாணடி
சின்மயநன்னோக்காற் சிற்சுரூபங்காட்டியெனைத
தன்மயம யாக்கியே தானவனாய்நின்றாணடி
தானென்னைப்பார்த்தாணடி தன்னைத்தானல்லாமல்
நானென்னசொல்லுவேண்டி நவிலவிடையில்லையடி
இன்றிருந்துநாளைக் கிறக்கிறபேரெல்லாரும
என்றும்பரிபூரணத்தி லினிதிருக்கச்சொன்னாண்டி
பாசகிலெளிதலவோ பற்றற்றபறறலவோ
ஆர்க்குமிடங்காட்ட வவனிதனில்வந்தாண்டி
இத்தனைகாலமடி யிறந்துபிறந்ததெல்லாம்
இத்தனையுமில்லையடி யிரும்பிலுறைநீரானேன்
எக்காலம்பட்டதடி யிறந்துபிறந்ததெல்லாம
அக்காலமெல்லாம அழுந்தினேனாகில்
காலங்கழிந்ததடி கர்மமெல்லாம்போச்சுதடி
நாலுவகைக்கருவு நாயநட்டமாச்சுதடி
மூப்பாழுக்கப்பால் முதற்பாழ்முழுமுதலாய
இப்போதுவந்தான்காண் எனைவிழுங்கிக்கொண்டான்காண்
பாலின்கணெய்யிருந்தாற் போலப்பரஞ்சோதி
ஆவிங்கணஞ்செய் தெனைவிழுங்கிக்கொண்டாணடி
தெத்தபடமானேனடி யிரும்பினீரானேனே
ஒத்தவிட்டித்திரையென் றோதுமுணர்வழிந்தேன்

ஒப்புவமையுமற் றேதவரிதாயபொருள்
இப்புவினிற்குருவே யென்னவந்தோன்றுள்வாழி
ஒப்பரிசொல்லிடினு முவமையி ழைத்திடினும
முப்பாலுங்கண்ணுணர்ந்தோர்முன்னோர்பொறுத்தருள்வார்

அருட்புலம்பல்-முற்றுப்பெற்றது.

---

பட்டணத்துப்பிள்ளையார்

## இறந்தகாலத்திரங்கல்

---

வார்த்தைதிறமில்லா மனிதருக்கும்புன்புலவாஞ்
சாத்திரங்கள்சொல்லிச் சதிரிழந்துகெட்டேனே
மெத்தமெத்தசெல்வாக்கில் வெறுமருளடுத்துத்
தத்திந்தலைகீழாய்த் தானடந்துகெட்டேனே
ஒழுக்கந்தலங்களினு மண்பெண்பொன்னாசையினும்
பழக்கந்தவிராமற் பதியிழந்துகெட்டேனே
ஆணிப்பொருந்து மரும்பூமியத்தனையுங்
காணியெனத்தனது கனம்பேசிக்கொண்டேனே
ஆசாரமில்லா விகடருடனகூடிப்
பாசாங்குபேசி பதியிழந்துகெட்டேனே
குருமார்க்கமில்லாக் குருடருடனகூடிக்
கருமார்க்கத்துள்ளே கருத்தழிந்துகெட்டேனே
ஆலமருந்து மரன்பெருமையெண்ணுமல்
பாலர்பெண்டீர்மெய்யென்று பதியிழந்துகெட்டேனே
பிணவாசமுற்ற பெருங்காயமெய்யென்று
பணவாசையாலே பதியிழந்துகெட்டேனே
கண்டபுலவர் கனக்கவேதானபுகழ
உண்டவுடம்பெல்லா முப்பரிதது கெட்டேனே
எண்ணிறந்தசெனம மெடுத்துச்சிவபூசை
பண்ணிப்பிழைபாமற் பதியிழந்துகெட்டேனே
சிற்றெறும்புசற்றுந் தீண்டாப்பொருவுடம்பை
உற்றுருக்கவுஞ்சுடவு மொப்பித்துமாண்டேனே
தன்னுடம்புதானே தனக்குப்பகையாமென்
றெண்ணுமுணர்விலாம லின்பமெனதுமாண்டேனே

சோலையுட்பூமாங்கிளைதழும் தொல்லன்னத்தக்கவளரு
மேலையும்புந்தகுற்றமென்று விருப்பாய்மாண்டேனே
போக்கும்வரத்தும்பொருள்வரத்துங்காணாமல்
வாக்கழிவுசொல்லி மனமருகிக்கெட்டேனே.

இறந்தகாலத்திரங்கல்
முற்றுப்பெற்றது.

---

பட்டணத்துப்பிள்ளையார்

# நெஞ்சொடுபுலம்பல்.

---

மண்காட்டிப்பொன்காட்டி மாயவிருள்காட்டிச்
செங்காட்டிலாடுகின்ற தேசிகனைப்போற்றாமல்
கண்காட்டும்வேசியர்தங் கண்வலையிற்சிக்கிமிக
அங்காடிநாய்போ லலைந்தனையேநெஞ்சமே. ௧

புட்பாசனவணையிற்பொற்பொட்டுமெத்தையின்மேல்
ஒப்பாவணிந்தபணி யொட்டாரணிநீங்காமல்
இப்பாய்க்கிடத்தி யியமனுயிர்கொள்ளுமுன்னே
முப்பாழைப்போற்ற முயங்கிலையேநெஞ்சமே. ௨

முப்பாழும்பாழாய் முதற்பாழ்வெறும்பாழாய்
அப்பாழுக்கப்பானை யருமைதனைப்போற்றாமல்
இப்பாழாய்வாழ்வைநம்பி யேமறலற்கொண்டீயாமல்
துப்பாழாய்வந்தவினை சூழ்ந்தனையேநெஞ்சமே. ௩

அன்னம்பகர்ந்திங்கலைந்தோர்க்குதவிசெய்யுஞ்
சென்மமெடுத்துஞ்சிவனருளைப்போற்றாமல்
பொன்னுமனையுமெழிற் பூவையருமவாழ்வுநிலை
இன்னுஞ்சதமாக வெண்ணினையேநெஞ்சமே ௪

முற்றொடர்பிற்செய்த முறைமையால்வந்தசெல்வம்
இம்மைநாட்பெற்றோமென் றெண்ணுதுபாழ்மதியே
அற்றவர்க்குமீயாம லன்பூசையோதாமல்
கற்றவர்க்குமீயாமற் கண்மறந்துவிட்டனையே. ௫

மாணிக்கமுத்து வயிரப்பணிபூண்டு
ஆணிப்பொன்சிங்கா தனத்திலிருந்தாலும்
காணித்துட்டலைமன கட்டியேகைப்பிடித்தால்
காணிப்பொன்கூடவரக் காண்கிலேமேநெஞ்சமே. ௬

கற்கட்டிமோதிரங் கடுக்கனரைஞாண்பூண்டு
திக்கெட்டும்போற்றத் திசைக்கொருத்தராலும்
பற்கிட்டவேமனுயிர் பந்தாடும்வேளையிலே
கைச்சட்டமகூடவரக் காணலையேநெஞ்சமே. ௭

முன்னேநீசெய்ததவ முப்பாலுஞ்சேருமன்றிப்
பொன்னும்பணிதிகழும பூவையுமங்கேவருமோ
தன்னைச்சதமாகச சற்குருவைப்போற்றாமல்
கண்ணற்றவந்தகன்போற் காட்சியற்றாய்நெஞ்சமே. ௮

மைபரவமூண்ட பரமாதிருப்பொற்றாளைத்
துய்யமலரபறித்துத் தொழுதுவணங்காமல்
கையிலணிவளையுங காலில்விம்பாடகமும்
மெய்யெனறிருமாந்து விட்டனையேநெஞ்சமே. ௯

மாதுக்கொருபாகம் வைத்தவரன்பொற்றாளைப்
போதுக்கொருபோதும் போற்றிவருந்தாமல்
வாதுக்குத்தேடியிதே மண்ணிற்புதைத்துவைத்தே
ஏதுக்குப்போகநீ யெண்ணினையேநெஞ்சமே. ௰

அஞ்சருளைப்போற்றி யைந்துபுலனைத்துதிக்க
நெஞ்சேயுனக்கு நினைவானசொல்லுகிறேன
வஞ்சகத்தைநீக்கி மறுநினைவுவாராமல்
செஞ்சரணத்தாளைச சிந்தைசெய்வாய்நெஞ்சமே. ௰௧

அற்புதமாயிந்தவுட லாவியடங்குமுன்னே
சற்குருவைப்போற்றித் தவம்பெற்றுவாழாமல்
உற்பத்திசெம்பொன வுடைமைபெருவாழ்வைநம்பிச்
சற்பத்தின்வாயிற் றவளைபோலானேனே. ௰௨

உற்றார்பெற்றா ருடன்பிறப்பார்பிள்ளைகளார்
மற்றாரிருந்தாலென மாளும்போதுதவுவரோ
கற்றாவிழந்தவிளங் கன்றதுபோலேயுருகிச்
சிற்றாகிச்சிற்றின்பஞ் சேர்ந்தனையேநெஞ்சமே. ௰௩

வீடிருக்கத்தாயிருக்க வேண்டுமனையாளிருக்கப்
பீடிருக்கவூணிருக்கப் பிள்ளைகளுந்தாமிருக்க
மாடிருக்கக்கன்றிருக்க வைத்தபொருளிருக்கக்
கூடிருக்கநீபோன கோலமென்னகோலமே ௰௪

சந்தனமுங்குங்குமமுஞ் சாந்துமபரிமளமும்
விந்தைகளாய்ப்பூசிநீ வேடிக்கையெய்யாக்

கந்தமலர்சூடுகின்ற கன்னியருந்தாமிருக்க
எந்தவகைபோனுமென் றெண்ணிலையேநெஞ்சமே. ௧௫

காற்றுத்துருத்தி கடியவினைக்குள்ளான
ஊற்றச்சடலத்தை யுண்டென்றிருமாந்து
பாத்திரங்கியன்னம் பசித்தோருக்கீயாமல்
ஆற்றுவெள்ளம்போல வளர்வினையேநெஞ்சமே ௧௬

நீர்க்குமிழிவாழ்வை நம்பி நிச்சயமென்றேயெண்ணிப்
பார்க்களவாமன்னம் பசித்தோர்க்களியாமல்
போர்க்குளெமதூதன் பிடித்திழுக்குமப்போது
ஆர்ப்பவோரென்றே யறிந்திலையேநெஞ்சமே ௧௭

சின்னஞ்சிறுநுதலாள் செய்தபலவினையான
முன்னந்தமார்பின் முளைத்தசிலந்திவிடமி
வன்னந்தளதளப்ப மயங்கிவலைக்குளாகி
அன்னம்பகிர்ந்துண்ண வறிந்திலையேநெஞ்சமே ௧௮

ஓட்டைத்துருத்தியை யுடையும்புழுக்கூட்டை
ஆட்டுஞ்சிவசித்த ரருளைமிகப்போற்றியே
வீட்டைத்திறந்து வெளியையொளியாலழைத்துக்
காட்டும்பொருளிதென்று கருதிலையேநெஞ்சமே ௧௯

ஊன்பொதிந்தகாய முளைந்தபுழுக்கூட்டைத்
தான்சுமந்ததல்லால்நீ சற்குருவைப்போற்றுமல்
கான்பரந்தவெள்ளங் கரைபுரளக்கண்டேகி
மீன்பரந்தாற்போல விசாரமுற்றாய்நெஞ்சமே. ௨௰

உடக்கையொருத்தி யுயிரையடைத்துவைத்த
சடக்கைச்சதமென்று சார்ந்தங்கிருமாந்தே
உடக்கைத்தகாற்றே யுயிரையமன்கொள்ளுகையிலே
யடக்கமாய்வைத்தபொரு ளங்குவரமாட்டாதே. ௨௧

தித்திக்குந்தேனைத் தெவிட்டாததெள்ளமுதை
முத்திக்குவித்தான முப்பாழைப்போற்றமல்
பற்றிப்பிடித்தியமன் பாசத்தாற்கட்டுமவணம்
சுற்றியிருக்கும்வினை சூழ்ந்தனையேநெஞ்சமே ௨௨

அஞ்செழுத்தாயெட்டெழுத்தா யைம்பத்தோரட்சரமாய்ப்
பிஞ்செழுத்தாய்நின்ற பெருமானைப்போற்றுமல்
வஞ்சகமாயுற்றமுலை மாதர்வலைக்குள்ளாகிய
பஞ்சரித்துத்தேடிப் பாழுக்கிரைத்தோமே. ௨௨

அக்கறுகுகொன்றைதும்பை யம்புலியுஞ்சூடுகின்ற
சொக்கர்திருத்தாளைத் தொழுதுவணங்காமல்

மக்கள்பெண்டீர்சுற்றமுடன் வாழ்வைமிகநம்பியென்பாய்
எக்காலமுமுண்டென் றெண்ணினையேநெஞ்சமே. உ௪

ஆண்டகுருவி னருளைமிகப்போற்றி
வேண்டுங்கயிலாய வீட்டுவழிபாராமல்
பூண்டகுழன்மாதர்நல்லார் பொய்மாய்கைக்குள்ளாகி
தூண்டிலகப்பட்டுத் துடிக்கெண்டையானேனே. உ௫

ஏணிப்பழு நாமிருவினையறுத்தாளுற்றும
பேணிநதொழுங்கயிலை பேறுபெறமாட்டாமல்
காணவருமபொருளாய்க் கண்கலக்கப்பட்டடியே
ஆணியற்றபாமரம்போ லாகினனேநெஞ்சமே உ௬

கோத்துப்பிரகாசங் கொண்டிருக்குமண்டமெல்லாம்
காத்தப்படியே கயிலாயஞ்சேருமல்
வேற்றுருவப்பட்டடியேன் வெள்ளம்போலுள்ளுருகி
ஏற்றுங்கழுவி லிருந்தபிணமானேனே. உ௭

கலைவிட்டுடலையுயிர் நீங்கியகலுமுன்னே
சிலைதொட்டவேடனைச்சிற் றின்ஞானைச்சேராமல்
வலைபட்டுழலுகின்ற மான்போற்பரதவித்துத்
தலைகெட்டநூலதுபோற் றட்டழிந்தாய்நெஞ்சமே. உ௮

முடிக்குமயிர்பொல்லா முழுக்குரம்பைமின்னாரின்
இடைக்குநடைக்கு மிதங்கொண்டவார்த்தைசொல்லி
அடிக்கொண்டதில்லை வனதனையனேநாயனேயே
விடக்கையிழந்த மிருகமதுவானேனே உ௯

பூவாணர்போற்றும் புகழ்மதுரைச்சொக்கரது
சீர்பாதம்போற்றிச் சிவலோகஞ்சேராமல்
தாவாரந்தோறுந் தலைபுகுக்கநாய்போலே
ஆகாதநெஞ்சமே யலைந்துதிரிந்தாயே. ௩௰

பத்தெட்டாயீரைந்தாய் பதினமூன்றிரண்டொன்றாய்
ஒத்திட்டுநின்றகோ ரோவியத்தைபோற்றுமல்
தெத்திட்டுநின்ற திரிகண்ணிக்குள்ளாகி
வித்திட்டாய்நெஞ்சே விடவுமறியாயே. ௩௧

அஞ்சுமுருவாகி யையமூன்றுமெட்டுமொன்றாய்
மிஞ்சியிருந்த விளக்கொளியைப்போற்றுமல்
பஞ்சிலிடுவன்னியைப்போற் பற்றிப்பிடியாமல்
நஞ்சுண்டகெண்டையைப்போல் நானலைந்துகெட்டேனே ௩௨

ஊனமுடனே யுடையுப்புழுக்கூட்டை
மானமுடனேசுமந்து மண்ணுலகின்வாளாமல்

ஆனதொருபஞ்சவர்க ளாண்டிருந்ததேசம்விட்டு
போனதுபோலேநாம் போய்ப்பிழைத்தோமில்லையே. உஎ

ஊறையிறைக்கின்ற உடம்பிருந்தபாண்டத்தை
நாறுமல்நாறி நழுவும்புழுக்கூடதனை
வீராம்புரதனை விரும்புமினறெப்படியென்
றூருநாட்டி லகன்றிருந்தா னில்லையே உஅ

அரியவறிவேகெடி யறியாவொருமுதலைப்
பரிவுடனேபோற்றும பரஞ்சுடரைப்போற்றாமல்
கரியபெருவாழ்வைநம்பி காமத்தழுந்தியே
அரிவாயிற்பட்ட கரியதுபோலானேனே. உகூ

தந்திரத்தையுன்னித் தவத்தைமிகநிறுத்தி
மந்திரத்தையுன்னி மயங்கித்தடுமாறி
விந்துருகிநாதமா மேலொளியைக்காணாமல்
அந்தரகத்தேகோலெறிந்த அந்தகன்போலானேனே. ங௰

விலையாகிப்பாணனுக்கு வீறடிமைபட்டதும்பின
சிலையானைவேடனெச்சிற றின்றுன்பம்போறாமல்
அலைவாயத்துரும்பதுபோ லாணவத்தினுலழுந்தி
புலைவாயமெழுகதுபோ லுருகினையேநெஞ்சமே. ஙக

நெஞ்சொடுபுலம்பல்-முற்றிற்று.

---

பட்டணத்துப்பிள்ளையார் அருளிச்செய்த

# பூரணமாலை

---

மூலத்துதித்தெழுந்த முக்கோணசக்கரத்துள
வாலைதனைப்போற்றாமல மதிமறந்தேன்பூரணமே. க

உந்திக்கமலத் துதித்துநின்றபிர்மாவைச
சந்தித்துக்காணாமற றட்டழிந்தேன்பூரணமே உ

நாவிக்கமல நடுநெடுமாற்காணாமல்
ஆவிகெட்டியானு மறிவழிந்தேன்பூரணமே ங

உருத்திரனையிருதயத்தி லுண்மையுடன்பாராமல்
கருத்தழிந்துநானுங் கலங்கினேன்பூரணமே ச

விசுத்திமயேச்சுரனை விழித்திருந்துபாராமல
பசித்துருகிநெஞ்சம் பதறினேன்பூரணமே ரு

உம

நெற்றிவிழியுடைய நிர்மலசதாசிவத்தைப்
புத்தியுடன்பாராமற் பொறிவழிந்தேனே பூரணமே ௬

நாதவிந்து தன்னை நடுமுடனே பாராமல்
போதமயங்கிப் பொறிவழிந்தேனே பூரணமே ௭

உச்சிவெளியை யுறுதியுடன் பாராமல்
அச்சமுடனானு மறிவழிந்தேன் பூரணமே ௮

மூக்குமுனையை முழித்திருந்து பாராமல்
ஆக்கைகெட்டு நானு மறிவழிந்தேன் பூரணமே ௯

இடைபிங்கலையி னியல்பறியமாட்டாமல்
தடையுடனே யானுந் தயங்கினேன் பூரணமே ௰

ஊனுக்குணின்ற வுலாவினதைக் காணாமல்
நானென்றிருந்து நலனழிந்தேன் பூரணமே ௧௧

மெய்வாழ்வைநம்பி விரும்பிமிக வாழாமல்
பொய்வாழ்வைநம்பிப் புலம்பினேனே பூரணமே ௧௨

பெண்டுபிள்ளை தந்தைதாய் பிறவியுடன்சுற்றமிவை
யுண்டென்றுநம்பி யுடலழிந்தேன் பூரணமே ௧௩

தண்டிகைபல்லாக்குடனே சகலசம்பத்துகளும்
உண்டென்றுநம்பி யுணர்வழிந்தேன் பூரணமே ௧௪

இந்தவுட லுயிரை யெப்போதுந்தான் சதமாய்
பந்தமுற்று நானும் பதமழிந்தேன் பூரணமே ௧௫

மாதர்பிரபஞ்ச மயக்கத்திலேவிழுந்து
போதமயங்கிப் பொறியழிந்தேனே பூரணமே ௧௬

சரியைகிரியாயோகந் தான்ஞானம்பாராமல்
பரிதிகண்டமதியதுபோற் படவழிந்தேனே பூரணமே ௧௭

மண்பெண்பொன்னாசை மயக்கத்திலேவிழுந்து
கண்கெட்டமாடதுபோற் கலங்கினேன் பூரணமே ௧௮

தனிமுதலைப்பார்த்துத் தனித்திருந்து வாழாமல்
அநியாயமாய்ப்பிறந்திங் கலைந்துநின்றேன் பூரணமே ௧௯

ஆறாறுசன்கலைக்கு ளிருந்துகூத்தாடினதை
ஆராய்ந்துபாராம லறிவழிந்தேன் பூரணமே ௨௰

வாசிதனைப்பார்த்து மகிழ்ந்தனைத்தான் போற்றாமல்
காசிவரைபோய்த்திரிந்து காலலுத்தேன் பூரணமே ௨௧

கருவிகரணங்களுற்றுக் கலந்துவிளையாடினதை
இருவிழியாற்பாராம லீடழிந்தேன் பூரணமே ௨௨

உடலுக்குள்நின் றுலாவிதனைக்காணாமல்
கடமலைதோறுந் திரிந்து காலலுத்தேன் பூரணமே ௨௩

அத்தேசகாலமுநா மிரவாஇருப்பமென்று
உற்றுணர்த்தான்பாராம லுருவழிந்தேன்பூரணமே. உ௪

எத்தனைதாய்தந்தை யிவர்களிடத்தேயிருந்தும
பித்தனாயானும் பிறந்திறந்தேன்பூரணமே உ௫

பெற்றலுத்தாள்தாயார் பிறந்தலுத்தேன்யானுமுன்றன்
பொற்றுணைத்தாள்தந்து புகலருள்வாய்பூரணமே உ௬

உற்றாருநலுத்தா ருறன்முறையார்சுட்டலுத்தார்
பெற்றலுத்தாள்தாயார் பிறந்தலுத்தேன்பூரணமே உ௭

பிரமன்படைத்தலுத்தான் பிறந்திறந்துநானலுத்தேன்
உரமுடையவக்கினிதா னுண்டலுத்தான்பூரணமே உ௮

எண்பத்தநான்குநூறாயிரஞ்செனனமுஞ்செனித்துப்
புண்பட்டுநானுன் புலம்பினேன்பூரணமே உ௯

என்னையறியாம லெனக்குள்ளேநீயிருக்க
உன்னையறியாம லுடலிழந்தேன்பூரணமே ௩௰

கருவாயுருவாய்க் கலந்துலகெலாநீயாய்
அருவாகிநின்ற தறிகிலேன்பூரணமே ௩௧

செம்பொற்கமலத் திருவடியைப்போற்றாமல்
பம்பைகொட்டவாடும் பசாசானேன்பூரணமே ௩௨

எனக்குள்ளேநீயிருக்க வுனக்குள்ளேநானிருக்க
மனக்கவலைதீர வாமருள்வாய்பூரணமே ௩௩

எழுவகைதோற்றத் திருந்துவிளையாடினதைப்
பழுதுவேபாராமற் பயனிழந்தேன்பூரணமே ௩௪

சாதிபேதங்கள் தனையறியமாட்டாமல்
வாதனையால்நின்று மயங்கினேன்பூரணமே ௩௫

சூலமொன்றுப்பேபடைத்த குறியையறியாமல்யான்
மலபாண்டத்துள்ளிருந்து மயங்கினேன்பூரணமே ௩௬

அண்டபிண்டமெல்லா மணுவுக்கணுவாகநீ
கொண்டவடிவின் குறியறியேன்பூரணமே ௩௭

சகஸ்திரத்தின்மேலிருக்குஞ் சற்குருவைப்போற்றாம
லகத்திலுடனாளுமதனா லறிவழிந்தேன்பூரணமே ௩௮

ஐந்துபொறியை யடக்கியுனைப்போற்றாமல்
நைந்துருகிநெஞ்ச மயங்கினேன்பூரணமே ௩௯

என்னைத்திருக்கூத்தா லிப்படிநீயாட்டுவித்தாய்
உன்னையறியா துடலழிந்தேன்பூரணமே ௪௰

காப்புதனைத்தோலெலும்பு நாற்றத்துக்குள்ளிருந்து
வாம்பரியமாட்டாமல் மயங்கினேன்பூரணமே ௪௧

இலங்கியுடைநாய்போற் சிவசெந்தக்குள்ளிருந்த
நலந்தனைத்தான்பாராமல் நலமழிந்தேன்பூரணமே ௪௨

குருவாய்ப்பரமாகிக் குடிலைசத்திநாதவிந்தாய்
அருவாயுருவான தறிகிலேன்பூரணமே ௪௩

ஒளியாய்க்கதிர்மதியா யுள்ளிருளாயக்கினியாய்
வெளியாகிநின்ற வியனறியேன்பூரணமே ௪௪

இடையாகிப்பிங்கலையா யெழுந்தசுழிமுனையாய்
உடலுயிராய்நீயிருந்த வுளவறியேன்பூரணமே ௪௫

மூலவித்தாய்நின்று மூளைத்துடல்தோறுமிருந்து
காலனைவழிகருங் கணக்கறியேன்பூரணமே ௪௬

உள்ளும்புறம்புமா யுடலுக்குள்நீயிருந்த
தெள்ளளவுநானறியா திருந்தேனே பூரணமே ௪௭

தாயாகித்தந்தையாய்த் தமர்கிளைநற்சுற்றமெல்லாம்
நீயாகிநின்ற நிலையறியேன்பூரணமே ௪௮

விலங்குபுள்ளூர்வனவாம் விண்ணவர்நீர்சாதிமனுக்
குலங்களெழுவகையில்நின்ற குறிப்பறியேன்பூரணமே ௪௯

ஆணாகிப்பெண்ணா யலியாகிவேற்றுருவாய்
மாணாகிநின்ற வகையறியேன்பூரணமே ௫௰

வாலையாய்ப்பக்குவமாய் வளர்ந்திறந்தானதும்
பாலையாய்நின்ற பயனறியேன்பூரணமே ௫௧

பொய்யாய்ப்புவியாய்ப் புகழ்வாரிதியாகி
மெய்யாகிநின்ற வியனறியேன்பூரணமே ௫௨

பூவாய்மணமாகிப் பொன்னுமாற்றாகி
நாவாய்ச்சொல்லான நயமறியேன்பூரணமே ௫௩

முதலாய்நடுவாகி முப்பொருளாய்மூன்றுமகா
இதமாகிநின்ற வியல்பறியேன்பூரணமே ௫௪

ஊனுமுடலுயிரா யுணர்ந்தகண்ணொளியாய்
தேனுமருசியான திறமறியேன்பூரணமே ௫௫

வித்தாய்மரமாய் விளைந்தகனிகாய்பூவாய்
சித்தாகிநின்ற திறமறியேன்பூரணமே ௫௬

ஐவகையும்பெற்றுலக மண்டபகிரமண்டமெல்லாந்
தெய்வமுமாநின்ற திறமறியேன்பூரணமே ௫௭

மனமாயக்கனவாகி மாய்கையாயுள்ளிருந்து
நினைவாகிநின்ற நிலையறியேன்பூரணமே ௫௮

சத்திசிவமிரண்டாய்த் தானேமுடிவிலொன்றாகிச்
சித்திரமாய்நின்ற திறமறியேன்பூரணமே ௫௯

பொறியாய்ப்புலனாகிப் பூதபேதப்பிரிவாய்
அறிவாகிநின்ற வளவறியேன்பூரணமே ௬௰

வானிற்கதிர்மதியாய் வளர்ந்தபின்னொன்றானதுபோல்
ஊனுடலுக்குள்ளிருந்த வுயிர்ப்பறியேன்பூரணமே ௬௧

பொய்யும்புலையுமிகப் பொருந்திவீண்பேசலன்றி
ஐயோவுனைவுரைக்க வறிகிலேன்பூரணமே ௬௨

நிரந்தரமாயெங்கு நின்றுவிளையாடினதைப்
பரமதுவேயென்னைப் பதமறியேன்பூரணமே ௬௩

கொல்வாய்பிறப்பிப்பாய் கூடவிருந்தேசுகிப்பாய்
செல்வாய்பிறகுட் செயலறியேன்பூரணமே ௬௪

வாரிதியாய்வையமெல்லா மனுமண்டபிண்டமெல்லாஞ்
சாருதியாய்நின்ற தலமறியேன்பூரணமே ௬௫

வித்தாய்மரமாய் வெளியாயொளியாய்நீ
சத்தாயிருந்த தரமறியேன்பூரணமே ௬௬

தத்துவத்தைப்பார்த்துப்பின் தன்னையறிந்தறிவால்
உய்த்துனைக்காணாம லுய்வாரோபூரணமே ௬௭

ஒன்றுயிராயுலகோ ராறுநீயிருந்தும்
என்றுமறியாத வேழைகள்தாமபூரணமே ௬௮

நேற்றென்றுநாளையென்று நினைப்புமறப்பாய்படைத்து
மாற்றமாய்நின்ற வளவறியேன்பூரணமே ௬௯

மனம்புத்திசித்தமகி றிவாங்காரமதாய்
நினைவாங்கலமான நிலையறியேன்பூரணமே ௭௰

உருப்பேதமின்றி யுயர்ந்தசத்தபேதமதாய்க்
குருப்பேதமாயவந்த குணமறியேன்பூரணமே ௭௧

சட்சமயபேதங்கள் தான்வகுத்துப்பின்னுமொரு
உட்சமயமுண்டென் றுரைத்தனையேபூரணமே ௭௨

முப்பத்திரண்டுருப்பாய் முனைந்துபடைத்துள்ளிருந்த
செப்படிவித்தைத் திறமறியேன்பூரணமே ௭௩

என்னதான்கற்றாலென் னெப்பொருளும்பெற்றாலென்
உன்னையறியாதா ருய்வாரோபூரணமே ௭௪

கற்றறிவோமென்பார் காணார்களுன்பதத்தைப்
பெற்றறியார்பங்களுக்குப் பிறப்பறுமோபூரணமே ௭௫

நானென்பாரண்டமென்பார் வாய்ஞானமேபேசித்
தானென்பாரூனர் தனையறியார்பூரணமே ௭௬

ஆதியென்பாரந்தமென்பா ரதற்குணவோயிருந்த
சோதியென்பார்காதத் தொழிலறியார்பூரணமே ௭௭

# பூரணமாலை.

மூச்சென்பாருள்ளமென்பார் மோனமெனுமோட்சமென்பார்
பேச்சென்பாருன்னுடைய பேரறியார்பூரணமே எஅ

பரமென்பார்பாழென்பார் பாழ்வெளியாய்நின்ற
வரமென்பாருன்றன் வழியறியார்பூரணமே எகூ

எத்தனைபேரோ வெடுத்தெடுத்துத்தானுரைத்தார்
அத்தனைபேர்க்கொன்றுன் குறிகிலேன்பூரணமே அ௰

நகாரமகாரமென்பார் நடுவேசிகாரமென்பார்
வகாரயகாரமென்பார் வகையறியார்பூரணமே அக

மகத்துவமாய்க்காம மயக்கத்துக்குள்ளிருந்து
பகுத்தறியமாட்டாமற் பயனழிந்தேன்பூரணமே அஉ

உண்மைப்பொருளை யுகந்திருந்துபாராமற்
பெண்மயக்கத்தாலே பிறந்திறந்தேன்பூரணமே அஙு

வாயாரவாழ்த்தி மகிழ்ந்துனைத்தான்போற்றாமல்
காயமெடுத்து கலங்கினேன்பூரணமே அச

சந்திரனைமேகமது தானமைத்தவாறதுபோற்
பந்தமுறையாலுனைப் பார்க்கிலேன்பூரணமே அரு

செந்தாமரைத்தாளைத் தினந்தினமும்போற்றாமல்
அந்தரமாய்நின்று கலங்கினேன்பூரணமே அசு

நீர்மேற்குமிழிபோல் நிலையற்றகாயமிதைத்
தாரகமென்றெண்ணிநான் றட்டழிந்தேன்பூரணமே அஎ

நெஞ்சமுருகி நினைந்துனைத்தான்போற்றிநெடு
வஞ்சகத்தைப்போக்க வகையறியேன்பூரணமே அஅ

எள்ளுக்குளெண்ணெய்போ லெங்குநிறைந்திருந்த
துள்ளமறியா துருகினேன்பூரணமே அகூ

மாயாப்பிரபஞ்ச மயக்கத்திலேவிழுந்தே
யோயாச்சனன மொழித்திலேன்பூரணமே கூ௰

பூசையுடன்புவன போகமெனும்போக்கியத்தால்
ஆசையுற்றேனானு மறிவழிந்தேன்பூரணமே கூக

படைத்தழித்திடுவாய் பார்க்கிற்பிரமாவெழுத்தைத்
தொடைத்துச்சிரஞ்சீவியாத் துலங்குவிப்பாய்பூரணமே கூஉ

மந்திரமாய்ச்சாத்திரமாய் மறைநான்காய்நீயிருந்த
தந்திரத்தைநானறியத் தருமோதான்பூரணமே கூஙு

அல்லாய்ப்பகலா யனவரதகாலமெனுஞ்
சொல்லாய்ப்பகுத்த தொடர்பறியேன்பூரணமே கூச

நாகஞ்சுவர்க்கமென் னண்ணும்பிரண்டண்டாயும்
ஆகாரமென்ப தறிகிலேன்பூரணமே கூரு

பாவபுண்ணியமென்னும் பருப்பாய்ப்படைத்துநித்தில்
காயவிலையுண்டாக்கிவைத்த வருளறிவேயென்பூரணமே ௧௬

சாங்கமென்றுங்கோபமென்றுஞ் சாதிபேதங்களென்றும்
பாந்தமென்றும்பத்தியென்றும படைத்தனையேபூரணமே ௧௭

பாசமுடலாய் பசுவதுவுந்தானுயிராய்
நேசமுடனீபொருளாய் நின்றனையேபூரணமே ௧௮

ஏதிலடியார் கிரங்கியிகத்தில்வருந்துன்
பாதமதில்தாழப் பரிந்தருளவாய்பூரணமே ௧௯

காணேனீயேநா னுமிரண்டுமொன்றானால்
தேனின்றுசியதுபோற் றெவிட்டாய்நீபூரணமே ௨௰

முடிவிலொருசூனியத்தை முடித்துநின்றபாரமல்
அடியிலொருசூனியத்தி லலைந்தேனேபூரணமே ௨௧

பூரணமாலைதனைப் புகழ்ந்திட்டஞானியர்க்குக்
தாரணியிலஞானந் தழைப்பிப்பாய்பூரணமே ௨௨

பூரணமாலை - முற்றிற்று.

பட்டணத்துப்பிள்ளையார்

# நெஞ்சொடுமகிழ்தல்.

அன்றுமுதலின்றளவு மாக்கையொடுகூட்சியுமாய்
நின்றநிலையறிய நேசமுற்றாயநெஞ்சமே ௧

அங்கங்குணர்வா யறிவாகியேநிரம்பி
எங்கெங்குமானநிலை யேகரித்தாய்நெஞ்சமே ௨

அலையாதபேரின்ப வானந்தவெள்ளத்தில்
நிலையாயுருவிறந்து நின்றனையேநெஞ்சமே ௩

பாராமற்பதையாமற் பருகாமலயாதொன்றும்
ஓராதுணர்வுடனே யொன்றினையேநெஞ்சமே ௪

களவிறந்துகொலையிறந்து காண்பனவுங்காட்சியும்போ
யளவிறந்துநின்றநிலை யன்புற்றாய்நெஞ்சமே ௫

பேச்சிறந்துசுட்டிறந்து பின்னிறந்துமுன்னிறந்து
நீச்சிறந்துநின்றநிலை நேசமுற்றாய்நெஞ்சமே ௬

விண்ணிறந்துமண்ணிறந்து வெளியிறந்துவொளியிறந்துக்
எண்ணிறந்துநின்றநிலை யேகரித்தாய்நெஞ்சமே ௭

பார்த்தவிடமெங்கும் பரமெனவேயுட்புறம்புங்
கோத்தபடியுண்மையெனக் கொண்டனையேநெஞ்சமே ௮

# நெஞ்சொடுமகிழ்தல்.

ஊரிறந்துபேரிறந்து வொளியிறந்துவெளியிறந்து
சீரிறந்துநின்றநிலை சேர்ந்தனையேநெஞ்சமே ௯

ஆண்பெண்ணலியென் றழைக்கவரிதாயநிறைந்து
காணவரிதாயவிடங் கண்ணுற்றாய நெஞ்சமே ௰

ஆங்காரமச்ச மகற்றியறிவினொடு
றாங்காமற்றூங்கிச் சுகம்பெற்றாய்நெஞ்சமே ௧௧

ஆசியாய்நின்ற வகண்டபரிபூரணத்தைச்
சாதியாதின்றவிடஞ் சார்வுற்றாயநெஞ்சமே ௧௨

விருப்புவெறுப்பில்லாத வெட்டவெளியதனில்
இருபம்பசுகமென் றிருந்தனையேநெஞ்சமே ௧௩

ஆருமுறாப்பேரண்டத் தப்புறத்துமிப்புறத்தும்
நீநுழைபபுமென்ன நிலைபெற்றாய்நெஞ்சமே ௧௪

உடலைகேவியிருந்து ணரவரியானோடு
கடனீருமாறும்போற் கலந்தனையேநெஞ்சமே ௧௫

நெடியகத்தைப்போக்கி நினைவைசழுங்கறுத்துப்
படிகத்துக்கும்பம்போற் பற்றினையேநெஞ்சமே ௧௬

மேலாகியெங்கும் விளக்கும்பராபொருளிற்
பாலுறுமென்சுவையிற் பற்றினையேநெஞ்சமே ௧௭

நீரொடுதண்ணொளியினொடு நீராளையாறேமேல்
ஊரொடுபேரில்லாளோ டொன்றினையேநெஞ்சமே ௧௮

இப்பிறப்பைப்பாழ்ப்படுத்தி யிந்தப்படியேயவிசாக
செப்பவரியாதவிடஞ் சேர்ந்தனையேநெஞ்சமே ௧௯

மேலாம்பதங்களெல்லாம் விட்டுவிட்டாய்ந்த
நாளாமபதத்தி னடந்தனையேநெஞ்சமே ௨௰

கடங்கடங்கடோறுங் கதிரவனும்போல நடி
யடங்குமிடந்தானறிந் தன்புற்றாய்நெஞ்சமே ௨௧

கற்றவனைக்கேட்டவனைக் காணுநாய்க்காணப்படவனைப்
உற்றவனைநின்றநிலை யொன்றயுப்பட்ட நெஞ்சமே ௨௨

பாலுவகைக்கானை நல்குபுலனைந்துமொன்றாயச்
சீலமுற்றுநின்றநிலை சேர்ந்தனையேநெஞ்சமே ௨௩

விட்டிடமுந்தொட்டிடமும் விண்ணணிடமுமண்ணணிடமுங்
கட்டுமொருதன்மையெனக் கண்ணுற்றாய்நெஞ்சமே ௨௪

எந்தெந்தநாளு மிருந்தபடியேயிருக்க
ஆநந்தச்சுகாதீத மாகினையேநெஞ்சமே ௨௫

வாகிரந்துநின்ற மனோகோசரந்தன்னிலே
தாக்கமவேநின்றநிலை தலைசெய்தாய்நெஞ்சமே ௨௬

ஏத்தேசமு நிறைந்தே யெக்காலமுந் திறந்த
சித்தாயசித்தினிடஞ் சேர்ந்தனையேநெஞ்சமே. உஎ

தாழாதே நீளாதே தன்மயமதாய்ச் சிறந்து
வாழாதே வாழு மருவினையேநெஞ்சமே. உஅ

உள்ளும்புறம்பு மொழிவற்றாதவானந்தக்
கள்ளருந்தி நிறைவிலே கண்ணுற்றாய்நெஞ்சமே. உகூ

வாதனைபோய்நிட்டையும்போய் மாமௌனராச்சியமும்போய்
பேதமறநிறைவிடம் பெற்றனையேநெஞ்சமே. ௩௰

இரதம்பிரிந்துகலந் தேகமாம்வாறேபோல்
விரகந்தவிர்ந்தனைப்பால் மேவினையேநெஞ்சமே. ௩௧

சோதியான்சூழ்பனிநீர் சூறைகொளுமாறேபோல்
நீதிகுருவின்றிருத்தாள நீபெற்றாயநெஞ்சமே. ௩௨

நெஞ்சொடுமகிழ்தல முற்றிற்று.

பட்டினத்துப்பிள்ளையார

# உடற்கூற்றுவண்ணம்.

தன தன தான, தன தன தான, தந்த தனந்தன தந்த தனந்த தனனதனந்த தனனதனந்த, தானனதானன தானதனந்த

ஒருமடமாது மொருவனுமாகி இன்ப சுகந்தரு மன்புபொருந்தி யுணர்வுகலங்கி யொழுகியவிந்து வூறுசுரோணித மீதுகலந்து

பனியிலொர்பாதி சிறுதுளிமாது, பண்டியில்வந்துபுகுந்துதிரண்டு பதுமவரும்பு கமடமிதென்று, பார்வைமெய் வாய்செவி கால்கைகளென்ற

உருவமுமாகி யுயிர்வளர்மாத, மொன்பதுமொன்று நிறைந்துமடந்தை யுதரமகன்று புவியில்விழுந்து யோகமும்வாரமு நாளுமறிந்து

மகளிர்கள்சேனை தரவணையாடை, மண்படவுந்தி யுதைந்துகவிழ்ந்து மடமயில்கொங்கை யமுதமருந்தி யோரறிவீரறி வாகிவளர்ந்து

ஒளிநகையூற லிதழ்மடவாரு, வந்துமுகந்திட வந்துதவழ்ந்து,மதலைமொழிந்து, வாவிருபோவென நாமம்விளம்ப

உடைமணியாடை யரைவடமாட, வுண்பவர்தின்பவர் தங்களொ டுண்டு, தெருவிலிருந்து புழுதியளைந்து, தேடியபாலரொ டோடிநடந்து அஞ்சுவயதாகிவிளையாடியே. (க)

உயர்தருஞான குருவுபதேச, முத்தமிழின்கலையுங்கரைகண்டு, வளர்பிறையென்று பலரும்விளம்ப, வாழ்பதினாறு பிராயமும்வந்து

மயிர்முடிகோதி யறுபதநீல, வண்டிமிர்தண்டொடை கொண்டை புனைந்து, மணிபொன்னிலங்கு பணிகளணிந்து, மாகதர்போகதர் கூடி வணங்க

மதனசொரூபனிவனெனமோக, மங்கையர்கண்டு மருண்டுதிரண்டு வரிவிழிகொண்டு சுழியவெறிந்து, மாமயில்போலவர் போவதுகண்டு

மனதுபொறாமலவர்பிறகோடி, மங்கலசெங்கல சந்திசழ்கொங்கை மருவமயங்கி யிதழமுதுண்டு, தேடியமாமுதல் சேரவழங்கி

ஒருமுதலாகி முதுபொருளாயி, ருந்ததனங்களும் வம்பிலிழந்து மதனசுகந்த விதனமிதென்று, வாலிபகோலமும வேறுபிரிந்து

வளமையுமாறி யிளமையுமாறி, வன்பல்விழுந்திரு கண்களிருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து, வாதவிரோத குரோதமடைந்து செங்கையினி லோர்தடியுமாகியே. (உ)

வருவதுபோவ தொருமுதுகூனு, மந்தியெனும்படி குந்திநடந்து, மதியுமழிந்து செவிதிமிர்வந்து, வாயறியாமல் விடாமல்மொழிந்து

துயில்வருநேர மிருமல்பொறாது, தொண்டையுநெஞ்சு முலர்ந்து வறந்து துகிலுமிழந்து சுணையுமழிந்து, தோகையர்பாலர்கள் கோறணிகொண்டு

கலியுகமீதி லிவர்மரியாதை, கண்டிடுமென்பவர் சஞ்சலமிஞ்ச, கலகலவென்று மலசலம்வந்து, கால்வழிமேல்வழி சாரநடந்து

தெளிவுமிராம லுரைதடுமாறி, சிந்தையுநெஞ்சு முலைந்துமருண்டு திடமுமுலைந்து, மிகவுமலைந்து, தேறிநலாதரவேதனொந்து

மறையவன்வேத னெழுதியவாறு, வந்ததுகண்டமு மென்றுதெளிந்து இனியென்னகண்ட மினியெனதொந்த, மேதினிவாழ்வு நிலாதினி நின்று

கடன்முறைபேசு மெனவுரைநாவு, றங்கிவிழுந்துகை கொண்டு மொழிந்து கடைவழிகஞ்சி யொழுகிடவந்து, பூதமுநாலு சுவாசமுநின்று நெஞ்சுதடுமாறிவருநேரமே. (ங)

வளைபிறைபோல வயிறுமுரோமம், முஞ்சடையுஞ்சிறு குஞ்சியும்வி
ஞ்ச, மனதுமிருண்டவடிவுமிலங்க, மாமலைபோல்யமதூதர்கள்வந்து

வலைகொடுவீசியுயிர்கொடுபோக, மைந்தரும்வந்துகுனிந்தழநொந்
து, மயில்விழுந்துமனைவிபுலம்ப மாழ்கினரேயிவர்காலமறிந்து

பழையவர்காணு மெனுமயலார்கள், பஞ்சுபறந்திட நின்றவர்பந்த
ரிடுமெனவந்து பறையிடமுந்து, வேபிணமவேக விசாரியுமென்று

பலரையுமேவிமுதியவர்தாமி, ருந்தசவங்கழுவுஞ்சிலரென்று, பணி
துகில்தோய்கல் களபமணிந்து, பாவகமேசெய்து நாறுமுடம்பை

வரிசைகெடாமலெடுமெனவோடி, வந்திளமைந்தர் குனிந்துசுமந்து
கடுகிநடந்துசுடலையடைந்து, மானிடர்வாழ்வென வாழ்வெனநொந்து

விறகிடமூடி யழல்கொடுபோட வெந்துவிழுந்துமுறிந்துநிணங்
களுருகியெலும்புகருகியட [illegible]டிநீறு மிலாதவுடம்பை நம்பு
மடியனையினி (௪)

பட்டணத்துப்பிள்ளையார் புராணம்.

முற்றிற்று.

— ⁂ —

௨

சிவமயம்

பட்டணத்துப்பிள்ளையார்

திருவாய்மலர்ந்தருளியபிரபந்தத்தின்

# அட்டவணை.


| பக்கம். | | பாட்டின்தொகை. |
|---|---|---|
| ௧ | பாயிரம் | ௨௰ |
| ௭ | பூம்புகார்ச்சருக்கம் | ௫௰ |
| ௧௧ | ஆட்கொண்டசருக்கம் | ௱௨ |
| ௨௮ | துறவறச்சருக்கம் | ௱௩ |
| ௪௮ | கோயில் நான்... | ௰ |
| ௬௫ | திருவிடைமருதூர் மு...வை | ௰ |
| ௮௫ | திருக்கழுமல மும்மணிக்... | ௨ |
| ௯௰ | திருவொற்றியூர் திருக்... | ௯ |
| ௯௭ | திருவந்தாதி | ௱ |
| ௱௯ | கோயிற்றிருவகவல் | |
| ௱௧௫ | திருவேகம்பமாலை | ௧ |
| ௱௨௰ | திருத்தில்லை | ௰ |
| ௱௨௨ | திருச்செங்காடு | ௧ |
| ௱௨௨ | திருவொற்றியூர் | ௨ |
| ௱௨௨ | திருவிடைமருதூர் | ௨ |
| ௱௨௩ | திருக்கழுக்குன்றம் | ௧ |
| ௧௨௩ | திருக்காளத்தி | ௬ |
| ௧௨௩ | திருக்கயிலாயம் | ௮ |
| ௧௨௪ | மதுரை | ௧ |
| ௧௨௪ | பொது | ௱௧ |
| ௧௩௨ | வெண்பா | ௨ |
| ௧௩௭ | முதல்வன்முறையீடு | |
| ௧௪௧ | அருட்புலம்பல் | |
| ௧௪௫ | இறந்தகாலத்திரங்கல் | |
| ௧௪௬ | நெஞ்சொடுபுலம்பல் | ௨௭ |
| ௧௫௩ | பூரணமாலை | ௨ |
| ௧௫௯ | நெஞ்சொடுமகிழ்தல் | ௨ |
| ௧௬௧ | உடற்கூற்றுவண்ணம் | ௩ |


அட்டவணை முற்றிற்று.